# ஆத்திசூடி

## உரையும் கதைக்குறிப்பும்

ஸ்ரீ மாகு

வாழ்தடை . ஸ்ரீவெங்கடராம சாஸ்திரிகள்

எழுதியன

மூன்றாவது பதிப்பு

ஆர். கணபதி அண்டு கம்பெனி
பிரம்பூர், சென்னை

1919

All Rights Reserved] [விலை அணா 5

# முகவுரை

‘ஆத்திசூடி’ என்பது இப்புத்தகத்தின் முதலில் உள்ள தொடர்மொழி. இது கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, என்பனபோல முதற்குறிப்பாகும்பெயர். இதனை இயற்றினவர் ஒளவையார். சிலர் ஒளவை என்னும் பெயரோடு இருவர் இருந்திருக்கவேண்டும் என்று அபிப்பிராயப்படுகின்றனர். இன்னுஞ்சிலர், அதிகமான் கொடுத்த அமிருதம்போன்ற நெல்லிக்கனியை உண்டதனால் ஒரே ஒளவைதான் நெடுங்காலம் வரையில் ஜீவித்திருந்தாளென்று சொல்லுகின்றனர்.

இப்புலவர் பெருமை பெற்ற பகவன் என்ற அந்தணனுக்கும் ஆதியென்பவளுக்கும் பிறந்தவள். கபிலர், திருவள்ளுவர் முதலான கல்விமான்களாகிய புலவர்களின் சகோதரி. சைவ சமயத்தினள். தமிழ்நாட்டு மூவேந்தரையும் சில பிரபுக்களையும் பாடிப் பரிசில் பெற்றிருக்கிறாள். இவள் சரித்திரத்தினால் குழந்தைகளிடத்தில் பிரியமும் இரக்கமுமுள்ளவளென்று தெரியவருகின்றது. இவர் இயற்றின வேறு நூல்கள் [illegible], விநாயகரகவல், கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, அசதிக்கோவை முதலியன

பிரதம பாடசாலை (பிரைமரி ஸ்கூல்) மாணவர்களின் உபயோகத்தை நினைந்து உலகநீதி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, நல்வழி என்ற ஐந்து புத்தகங்களுக்கும், உரையும் கதைக்குறிப்பும் எளிய நடையில் எழுதி வெளிப்படுத்தியிருக்கிறோம். அவற்றில் இது ஆத்திசூடியின் உரையும் கதைக்குறிப்பும் சேர்ந்த மூன்றாவது பதிப்பு. பிள்ளைகளுக்கு நீதி சம்பந்தமான சரித்திரங்களைக் கற்பிப்பதற்கு இதுபோன்ற சிறு நூல்கள் இன்றியமையாதன.

சென்னை
2-3-1919

இங்ஙனம்
ஆர். கணபதி அண்டு கம்பெனி.

# ஆத்திசூடி,

## உரையும் கதைக்குறிப்பும்.

கடவுள் வாழ்த்து.

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே.

(பதவுரை.) **ஆத்தி-ஆத்தி** (மலர்மாலையை), **சூடி-அணிந்தவ ரான** (சிவபெருமான்), **அமர்ந்த - விரும்பின, தேவனை - (விநாயக) மூர்த்தியை, ஏத்தி** ஏத்தி - பலமுறையும் **துதித்து, யாம் - நாம், தொழுவோம்-வணங்குவோம்.** ஏ - **அசை.**

கதைக்குறிப்புக்கள்.

1. முன்னொரு காலத்தில் அயோத்திப் பட்டணத்தில் தசரதர் என்று ஒரு பெரிய அரசர் இருந்தார். அவர் கோசலநாட்டிக்குத் தலைவர். உலகத்துக்குச் சக்ரவர்த்தி. அவருக்கு இராமன், இலக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் என்று நான்கு புத்திரர் பிறந்தனர். அவர்களில் இராமன் மிகவும் நல்லவன். அடக்கமும் பொறுமையும் உள்ளவன். தாய் தந்தைகளின் கட்டளைகளைத் தவறாமல் செய்பவன். அவன் வசிஷ்டர், விசுவாமித்திரர் என்ற இரண்டு முனிவர்களையும் அடுத்து அவர்களிடத்தில் எல்லாச் சாஸ்திரங்களையும் குறைவில்லாமல் கற்றுத் தேர்ச்சியடைந்தான். பின்னர் மிதிலைக்கரசன் மகளான சீதை என்பவள் அவனுக்கு மனைவியானாள். அவள் உத்தம ஒழுக்கங்களுக்கு உறைவிடமானவள்.

தசரதர் ஒரு சமயத்தில் இராமனுக்கு இராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய முகூர்த்தம் நிச்சயித்திருந்தார். எல்லாக் காரியங்களும் சித்தமாகி விட்டன. பட்டணம் முழுவதும் அலங்கரித்தாயிற்று. அப்பொழுது கைகேயி என்ற அவன் சிறிய தாயார் அம்முகூர்த்தத்தைத் தடுத்து அன்று அதிகாலையில் அவனை நோக்கி, "இராமா! நீ நல்லபிள்ளை; உன் தந்தை சம்மதத்தின்பேரில் உனக்கு ஒரு கட்டளை இடுகிறேன்: நீ அதனைச் சந்தோஷமாகச் செய்யவேண்டும்; இன்று முதல் பதினான்கு வருஷம் வரையில் நீ வனத்தில் வாசம்செய்; அதுவரையில் உன் தம்பி பரதன் அயோத்திக்கு அரசனாக இருக்கட்டும்; நீ அப்புறம் அரசாட்சியைச் சொந்தமாகக் கொள்ளலாம்" என்று சொன்னார். இராமன் அவளை வணங்கி, "அம்மா! அதற்கென்ன தடை; பெற்றவர் கட்டளையைப் பிள்ளைகள் தள்ளமாட்டார்கள்; அதுதான் அவர்களுக்குப் பெரிய தருமம்; என் கடமையை நான் சந்தோஷமாகச் செய்கிறேன்" என்று சொல்லி மனைவி சீதையோடும், தம்பி இலக்ஷ்மணனோடும் அப்பொழுதே புறப்பட்டு வனத்துக்குச் சென்றுவிட்டான்.

பிற்பாடு, வனத்தில் பரதன் முதலானவர் வந்து பலவாறு பணிந்து வேண்டியும்கூட அவன் தவணை முடிவதற்குள் திரும்பவேயில்லை. பதினான்கு வருஷத்தையும் வனத்தில் சந்தோஷமாகக் கழித்துப் பெரிய கீர்த்தியை அடைந்தான். ஆதலால், நாமும் இராமனைப்போல நமது கடமைகளான தரும காரியங்களைச் சந்தோஷமாகச் செய்ய விரும்பவேண்டும். **இராமாயணம்.**

## அறம்செய விரும்பு.

**அறம் - (உன் கடமையான) தரும காரியங்களை, செய - செய்வதற்கு, விரும்பு - (நீ) ஆசைப்படு.**

2. முன்னாளில் அஸ்தினபுரத்தில் திருதராஷ்டிரன் பாண்டு என்று இரண்டு அரச சகோதரர் இருந்தனர். திருதராஷ்டிரனுக்குத் துரியோதனன் முதலான நூறு புத்திரரும், பாண்டுவுக்குத் தருமபுத்திரன் முதலான ஐந்து புத்திரரும் பிறந்தார்கள். துரியோதனன் முதலானவர் பேராசை, பொறாமை முதலான துர்க்குணங்களுக்கு உறைவிடமாக வளர்ந்தனர். தருமன் முதலானவருக்குப் பாண்டவர் என்று பெயர். இவர்கள் நற்குணங்களுக்கு நிதியைப்போல விளங்கினார்கள். ஒரு சமயத்தில் துரியோதனன் கெட்ட எண்ணத்தினால் பாண்டவர்களுடைய எல்லாச் செல்வங்களையும் சூதில் அபகரித்துக்கொண்டு, இராஜ சபையில் அவர்களைப் பலவாறு இகழ்ந்து பேசினதுமல்லாமல், அவர்கள் மனைவியான பாஞ்சாலியை அனைவருக்கும் முன்னிலையில் அழைத்து வந்து மானபங்கமும் செய்தான்.

அதனைக் கண்ட மாத்திரத்தில் வீமன் முதலான பாண்டவ சகோதரர்கள் அடங்காக் கோபங்கொண்டு ‘துரியோதனனை இப்பொழுதே கொன்று விடுகிறோம்’ என்று தங்கள் கரத்திலுள்ள ஆயுதங்களை உயரத் தூக்கினார்கள். ஆனால், மூத்தவரான தருமபுத்திரர் மாத்திரம் கொஞ்சமும் கோபம் கொள்ளவில்லை. அவர் மிகவும் சாந்தமாகச் “சகோதரர்களே! பொறுத்துக் கொள்ளுங்கள். இஃது உங்கள் கோபத்துக்குச் சமயம் அன்று; மற்றொரு சமயத்தில் கோபங்களையும் ஆயுதங்களையும் உபயோகித்துக் கொள்ளலாம்” என்று சொல்லி அவர்களை அடக்கி உயர்ந்த கீர்த்தியை அடைந்தார். அவர் உலகத்தில் இருக்கும் வரையில் கோபம் கொண்டதேயில்லை. ஆதலால், தருமபுத்திரரைப்போல நாமும் எப்பொழுதும் கோபத்தை அடக்கவேண்டும்.

மகாபாரதம்.

## ஆறுவது சினம்.

**ஆறுவது - தணியவேண்டியது, சினம் - கோபமேயாகும்.**

3. சோழநாட்டில் கம்பர் என்று ஒரு பெரும்புலவர் இருந்தார். தமிழ்நாட்டு மூவேந்தரும் கவிசக்ரவர்த்தி என்று அவருக்குப் பட்டமும் வரிசையும் அளித்திருந்தார்கள். அவர் ஒரு சமயத்தில் குமார குலோத்துங்கன் என்ற சோழ மன்னவனோடு மனஸ்தாபப்பட்டு அவன் நாட்டைவிட்டு வெளியில் சென்றுவிட்டார். நடுவழியில் அவருக்குப் பசி அதிகரித்தது. அப்பொழுது கொல்லையில் ஏர் உழுதுகொண்டிருந்த ஒரு குடியானவனுக்கு அவன் மனைவி சாப்பாடு கொண்டுவந்தாள். கம்பர் அவனிடம் சென்று தமக்குக் கொஞ்சம் சாப்பாடு தரும்படி கேட்டார். அக்குடியானவன் 'ஐயா! தங்களுக்குக் கொடுக்கும்படியான உயர்ந்த சாப்பாடு என்னிடம் இல்லை; ஏழைகளின் பசியைத் தணிக்கும் எளிய சாப்பாடு தான் இருக்கிறது; வாருங்கள்! தருகிறேன்' என்று இன்சொல் சொல்லித் தன் சாப்பாட்டைக் கொடுத்தான். கம்பர் அதனை அன்புடன் உண்டு களைதீர்ந்து அவனை வாழ்த்திப்போனார். பிற்பாடு, குடியானவன் நிலத்தை உழுகையில் பொன்னும் வெள்ளியும் நிறைந்த ஒரு பெரும் புதையல் கிடைத்தது. அவன் அதனைக் கம்பர் அநுக்கிரகம் என்றுசொல்லி வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வந்தான். ஆதலால், நாமும் நம்மிடத்தில் வந்து இரப்பவர்களுக்கு உதவக்கூடிய பொருள்களை இல்லை என்று ஒளிக்கலாகாது.

**விநோதரசமஞ்சரி.**

## இயல்வது கரவேல்.

***இயல்வது-கொடுக்கக்கூடியதை, கரவேல்-(நீ இரப்பவர்களுக்கு) ஒளிக்காதே.***

4. நெடுங்காலத்துக்கு முன்னர் மகாபலி என்று ஒரு அசுர சக்ரவர்த்தி இருந்தார். அவர் நல்லொழுக்கம் நிறைந்தவர். ஒரு சமயத்தில் அவர் யாகம் செய்து கொண்டிருந்தபொழுது ஸ்ரீ மகாவிஷ்ணு மிகவும் சிறிய வாமன வடிவத்தோடு சென்று 'ஐயா சக்ரவர்த்தியே! நான் அந்தணகுலம். தவம் செய்வதற்கு என் காலினால் மூன்று அடிகொண்ட நிலத்தைத் தம்மிடத்தில் தானம் பெற்றுச் செல்ல வந்திருக்கிறேன்' என்று சொன்னார். பலிசக்ரவர்த்தி 'அளிக்கிறேன்; பெற்றுக் கொள்ளுங்கள்' என்று பதில் கூறினார். அப்பொழுது அங்கிருந்த சுக்கிர பகவான் தம் மாணாக்கனாகிய பலிசக்ரவர்த்திக்கு 'இச்சிறுவன் பொய்வேஷம் பூண்டு வந்திருக்கிறான்; இஃது இவனுக்கு உண்மையான வடிவம் அன்று; இவனுக்குத் தானம் தராதே; தரின் உனக்குத் துன்பம் சொந்தமாகும்' என்று சொல்லித் தடுத்தார். பலி அவர் வார்த்தையைக் கேட்கவில்லை. தாம் சொல்லிய வண்ணம் அவருக்குத் தானம் பண்ணப்போனார். தானம் செய்பவர் பெற்றுக்கொள்கின்றவர் கையில் நீரை வார்த்து மந்திரம் சொல்லித் தருவது வழக்கம். சக்ரவர்த்தியும் அவ்வாறு நீர் வார்ப்பதற்குப் பாத்திரத்தை எடுத்தார். சுக்கிரர் பலியின்மேலுள்ள அன்பினால் அப்பாத்திரத்தின் மூக்கில் சிறிய வடிவத்தோடு புகுந்து துவாரத்தை அடைத்துத் தண்ணீர் விழவொட்டாமல் தடுத்தார். ஸ்ரீமகாவிஷ்ணு அதனை அறிந்து தர்ப்பையினால் அத்துவாரத்தைக் குத்தி அதன் மூலமாக அவர் கண்களிலும் ஒன்றைக் குருடாக்கினார். பின்னர்ச் சுக்கிரர் கண்ணை இழந்து அவமானம் அடைந்து அங்கில்லாமல் துக்கத்தோடு மறைந்துபோனார். அவரைப்போல நாமும் பிறருக்கு ஒருவர் கொடுப்பதை 'வேண்டாம்' என்று தடுக்கலாகாது.

## ஈவது விலக்கேல்.

**ஈவது-(ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல்-(நீ) தடுக்காதே.**

5. ஒருசமயத்தில் இந்திரன் சுவர்க்கத்தில் உள்ள சுதர்மை என்னும் சபையில் கொலுக்கொண்டிருந்தான். அந்தச்சபைக்கு எல்லாப் புண்ணியபுருஷர்களும் வந்து திரண்டிருந்தார்கள். அப்பொழுது இந்திரன் அங்கிருந்த யயாதி மன்னனை நோக்கி 'ஐயா! நீங்கள் தவத்தில் யாருக்குச் சமானம்; உண்மையைச் சொல்லுங்கள்' என்றான். யயாதி ராசன் 'நான் தேவர்களையும் மனிதர்களையும் தவத்தில் மிஞ்சியிருக்கிறேன்; எனக்குச் சரியானவர் ஒருவரும் இல்லை; நான்தான் இப்பொழுது அனைவரிலும் உயர்ந்தவன்' என்று கருவங்கொண்டு கூறினான். அதனால், அவன் புண்ணியம் குறைந்து அப்பொழுதே நிலத்தில் விழுந்துவிட்டான். அப்புறம் ஒருநாள்கூட அவன் சுவர்க்கத்தில் இருக்கவில்லை. அந்த அரசனைப்போல ஒருவன் தன் தவத்தையும் பொருளையும் அயலாரிடம் அகங்கரித்துச் சொல்லலாகாது. **மகாபாரதம்.**

## உடையது விளம்பேல்.

**உடையது-(நீ) உடைத்தாயிருக்கும் தவத்தை (அல்லது) பொருளை, விளம்பேல்-(பிறரிடத்தில் அகங்கரித்துச்) சொல்லாதே.**

6. முன்னொருகாலத்தில் மிருகண்டு என்று ஒரு முனிவர் இருந்தார். அவருக்கு மார்க்கண்டன் என்று ஒரு புத்திரன் பிறந்தான். சோதிடசாஸ்திரிகளும் வேறு சில பெரியவர்களும் 'அந்தச் சிறுவன் தனது பதினாறுவது வயதில் அற்பாயுளாக இறந்துபோவான்' என்று சொன்னார்கள். அவ்விஷயம் மெள்ள மெள்ள மார்க்கண்டனுக்குத் தெரிந்தது. அவன் மரணத்தை மாற்றிக்

கொள்ள முடியாது என்று தெரிந்தும்கூட முயற்சி செய்யாமல் இருக்கவில்லை. சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயங்கள்தோறும் சென்று அவரைப் பக்தியுடன் வணங்கிப் பூஜைசெய்து வந்தான். திருக்கடவூரில் அவன் கடவுளைப் பூஜைசெய்து கொண்டிருக்கையில் தென்திசைக்குத் தலைவனாகிய இயமன் எருமைக்கடாவின் மீது ஏறி வந்து மார்க்கண்டன்மேல் தனது பாசத்தை வீசி இழுக்கத் தொடங்கினான். அப்பொழுது சிவபெருமான் இலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு வந்து இயமனைத் தமது காலினால் உதைத்துத்தள்ளிச் சிறுவனைக் காப்பாற்றினார். மார்க்கண்டன் கடவுள் அநுக்கிரகத்தினால் எவராலும் தடுக்க முடியாத அந்தப் பொல்லாத மரணத்தையும் நீக்கிக் கொண்டுவிட்டான். அவனைப்போல நாமும் எந்தக்காரியத்திலும் கடைசிவரையில் முயற்சியைக் கைவிடலாகாது.

**ஸ்காந்தம்.**

ஊக்கமது கைவிடேல்.

**ஊக்கம் அது-(செய்யும் தொழிலுக்கான) முயற்சியை, கைவிடேல் - (நீ) கைவிடாதே.**

—ooo—

7. முன்னர் வட இந்தியாவில் பாஸ்கராசாரி என்று ஒரு பண்டிதர் இருந்தார். அவர் பெண்ணுக்கு லீலாவதி என்று பெயர். அவளுக்கு இளம்பிராயத்திலேயே புருஷன் இறந்து போய்விட்டான். அப்புறம் லீலாவதி தன் பொழுதுபோக்குக்காகத் தந்தையிடத்தில் கணிதம் கற்று முடிவில் அந்தச் சாஸ்திரத்தில் பெரிய பண்டிதை ஆனாள். எல்லாச் சபைகளிலும் அவளுக்குக் கணிதசாஸ்திரத்தில் முதல் மரியாதை கிடைத்துவந்தது. பிற்பாடு, அவள் தன்பெயரால் லீலாவதி என்று ஒரு

* **அது, பகுதிப்பொருள் விகுதி. இங்ஙனமே 36, 56 க்கும் கொள்க.**

கணித நூல் இயற்றிப் பெரும்புகழ் அடைந்தாள். அந் நூல் இங்கிலீஷ் முதலான பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. லீலாவதி உலகத்தில் பிரசித்தி பெறுவதற்கு அவள் கற்ற கணிதசாஸ்திரமே காரணம் அல்லவா? **இந்தியமாதர் சரித்திரம்.**

b முன்பு பாடலிபுரத்தில் வர்ஷன் என்று ஒரு உபாத்தியாயர் இருந்தார். அவரிடத்தில் பாணினி என்ற ஒரு மாணாக்கன் கல்வி கற்றுவந்தான். அவன் கல்வியில் மிகவும் மந்தன். அவனுடன் கற்றுவந்த மற்றச் சிறுவர்கள் அவனைப் புத்தியில்லாதவன் என்று சொல்லிப் பரிகாசஞ் செய்வார்கள். பாணினி அந்த அவமானத்தைப் பொறுக்க முடியாமல் வனத்துக்குச் சென்று தவஞ்செய்து கடவுள் அருளால் எல்லாச் சாஸ்திரங்களிலும் பெரிய பண்டிதன் ஆனான். பிற்பாடு, அவன் உயர்ந்த இலக்கணம் ஒன்றை எழுதிக்கொண்டுவந்து பாடலிபுரத்தில் இருந்த வாருசி முதலான மகாபண்டிதர்களையும் வென்று அவ்விலக்கணத்தைத் தன்பெயரால் உலகத்தில் பரவவைத்தான். அதற்குப் பாணினி இலக்கணம் என்று பெயர். இப்பொழுதும் கூட வடமொழிக்கு அந்த இலக்கணமேதான் உயர்ந்ததாக இருந்துவருகின்றது. ஆதலால், கணிதத்தையும், இலக்கணத்தையும் ஒவ்வொருவரும் இகழாமல் கற்றுப் பண்டிதர் ஆகவேண்டும். **கதாசரித்சாகரம்.**

## எண்ணெழுத்து இகழேல்.

***எண்—கணிதநூலையும், எழுத்து - இலக்கணநூலையும், இகழேல்—(நீ) இகழ்ச்சி பண்ணாமல் (கற்றுக்கொள்.)***

8. அயோத்திப்பட்டணத்தில் அரிச்சந்திரன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் ஒரு சமயத்தில் தனது நாடு நகரங்களையும், அரசையும் விசுவாமித்திர முனிவ

ருக்குத் தானம் பண்ணிவிட்டு மனைவியோடு காசிப்பட்டணம் போனான். அப்பொழுது அவன் அம்முனிவருக்குக் கொஞ்சம் பொன் கடன் தரவேண்டியிருந்தது. அந்தத் தொகை அவ்வளவு பெரியதும் அன்று; காசியரசனிடத்திலாவது தம்மாமனாகிய மதிதயமன்னவனிடத்திலாவது அந்தப் பொன்னை மிகவும் எளிதில் பெற்று முனிவர் கடனைக் கொடுத்திருக்கலாம். ஒருவரிடத்தில் இல்லை என்று கைநீட்டிப் பெறுவது தனக்கு என்றைக்கும் இகழ்ச்சியாகும் என்று அவன் தன் மனைவியை அந்தணருக்கு அடிமையாக்கியும், தான் ஒரு பறையனுக்கு அடிமையாகியும் பொன்பெற்று முனிவர் கடனைக் கொடுத்தான். ஆதலால், ஒருவர் கஷ்டகாலத்தில்கூடப் பிறரிடம் சென்று இல்லை என்று யாசகம் செய்யலாகாது. **மகாபாரதம்.**

### ஏற்பது இகழ்ச்சி.

***ஏற்பது*–(ஒருவரிடத்தில் சென்று இல்லையென்று) யாசிப்பது, *இகழ்ச்சி* - இழிவாகும்.**

9. சந்திரகுலத்தில் ரந்திதேவர் என்று ஓரரசர் இருந்தார். அவர் 'உடல் நிலையற்றது; தருமம் ஒன்றுதான் நிலைபெற்றது' என்று தெரிந்துகொண்டு, தம்மை விரும்பிவந்த யாசகர்களுக்கு இல்லை என்னாமல் எல்லாவற்றையும் விருப்பத்தோடு கொடுத்துவிட்டுக் காட்டுக்குப் போனார். அங்கு நாற்பத்தெட்டு நாட்கள் வரையில் பட்டினிகிடந்து ஒரு பெரிய விரதத்தைப் பக்தியுடன் முடித்துப் பாரணை பண்ணத் தொடங்கினார். அப்பொழுது ஒரு பிச்சைக்காரன்வந்து "ஐயா! மிகவும் பசிக்கின்றது; ஏதாவது கொஞ்சம் உணவுதாருங்கள்" என்று கேட்டான். அவர் அவனுக்குத் தமது உணவில் பாதியைக் கொடுத்தார். பின்பு மற்றொருவன் பசி

யென்று வந்து யாசித்தான். அவனுக்கும் இருந்தவற்றில் பாதியைக்கொடுத்தார். பிற்பாடு, இளைத்த நாய் ஒன்று பசியால் மெலிந்து வந்து வாலைக்குழைத்து நின்றது. அவர் மிச்சத்தை அதற்கு வைத்துவிட்டுத் தாம் சந்தோஷமாகத் தண்ணீரைப் பருகினார். அச்சமயத்தில் கடவுள் வந்து அவர் கருணையை மகிழ்ந்து விரும்பிய வரங்களைக் கொடுத்து மறைந்தார். அவரைப்போலவே அனைவரும் இரப்பவர்களுக்கு இல்லையென்னமல் கொடுத்து உண்ணவேண்டும். **பாகவதம்.**

ஐயம் இட்டுண்.

ஐயம் – **பிச்சையை, இட்டு** - (யாசிப்பவர்களுக்குக்) கொடுத்து, **உண்** - (நீயும்) உண்ணு.

10. முன்னர் இளையான்குடி என்னும் ஊரில் மாறன் என்று ஒரு சிவபக்தர் இருந்தார். அவர் தம்மிடத்தில் வந்து யாசித்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் கொடுத்துக் கொடுத்து, எல்லாப் பொருள்களையும் இழந்துவிட்டார். அப்புறம் மிகுந்த தரித்திரத்தினால் அவரும் அவர் மனைவியும் இரண்டொரு சமயங்களில் பட்டினியும் கிடந்து வருந்தும்படி நேர்ந்தது. அப்படிப்பட்ட தருணத்தில் ஒருநாள் முன்னிரவில் மழையில் நனைந்த ஒரு பெரிய கிழவர் நடக்கமுடியாமல் அவர் வீட்டுத் தலைக்கடைத் திண்ணையில் வந்து விழுந்தார். பக்தரும் அவர்மனைவியும் அந்தப்பெரியவர் உடம்பைத்துடைத்து வேறு வஸ்திரம் கொடுத்து உள்ளே அழைத்துக் கொண்டுபோய் உட்காருவித்தார்கள்.

அப்புறம் அவருக்குச் சாப்பாடு படைப்பதற்கு வேறுவழி இல்லாதபடியினால் அந்தப்பக்தர் அன்று காலையில் நாற்றுவிடுவதற்கு வயலில் *தெளித்துவந்த முளை

விதைகளைச் சேற்றோடுவாரி ஒரு கூடையில் இட்டு எடுத்து வந்து மனைவி கையில் கொடுக்க, அந்நாயகி அவற்றைக் கழுவிச் சுத்தமாக்கி வறுத்துக் குற்றி அரிசிசெய்து ஒரு வாறு சமையல் பண்ணிப் பெரியவரை உண்பித்தாள். அந்த சிவயோகியார் அவர்கள் உபசாரணையாலும் இன் சொல்லாலும் அமுது அமிருதத்திலும் அதிகமாக இருந்தது. பெரியவர் அதனை அன்புடன் அருந்தி அவர் களுக்கு அநுக்கிரகம் பண்ணிப்போனார். அவரைப்போல ஒவ்வொருவரும் தம்மால் முடியும்வரையில் விருந்தினர் களை உபசரிக்கவேண்டும். **பெரியபுராணம்.**

ஒப்புரவொழுகு.

**ஒப்புரவு** - (வருமானத்துக்குத் தகுதியாக) **விருந்தினரை** **உப சரித்து. ஒழுகு**-(நீ உலகத்தில்) நட.

11. மதுரைப்பட்டணத்தில் கீரன் என்று ஒருவன் இருந்தான். அவன் உறவினர் சங்குகளை அறுத்து வேலை செய்து விற்று வயிறு வளர்ப்பவர்கள். கீரனுக்கு அந்த வேலைசெய்ய மனம் இல்லை. படிப்பில் ஆசை அதிகமாக இருந்தது. அதனால், அவன் இடைவிடாமல் படித்துச் சில வருஷங்களுக்குள் பெரிய பண்டிதன் ஆனான். ஒரு சமயத்தில் பாண்டியராஜாவின் சபையில் பிரதான பண்டி தர் வேலைக்கு ஒரு போட்டிப் பரீக்ஷை நடந்தது. அதில் கீரன் முதல் வகுப்பில் தேறி நக்கீரன் என்ற பெயரையும் அந்த உத்தியோகத்தையும் அடைந்தான். மற்றொரு சமயத்தில் அவன் சிவபெருமான் எழுதி யனுப்பின 'கொங்குதேர்வாழ்க்கை' என்னும் பாட்டுக்குக் குற்றம் சொல்லி அக்கடவுளுடன் தமிழ்ச்சங்கத்தில் நேர்நின்று வாதமும் புரிந்தான். அக்காலத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அவன்தான் தலைமை பெற்றவன். அவ்வளவு

சிறப்பும் அவனுக்குப் படிப்பினால் வந்ததேயன்றி மற்றொன்றினாலும் அன்று. ஆதலால், அனைவரும் படிப்பதைக் கைவிடலாகாது. **திருவிளையாடற் புராணம்.**

ஓதுவது ஒழியேல்.

**ஓதுவது-படிப்பதை, ஒழியேல்-(நீ) கைவிடாதே**

---

12. மலைகளுக்குள் மிகப்பெரியது இமயமலை. அது நெடுஞ் சுவர்போல வளர்ந்து இந்தியாவுக்கு வடக் கெல்லையாக விளங்கி வருகின்றது. கங்கை, யமுனை முதலிய புண்ணியநதிகள் பாயும் அதனிடம் உற்பத்தியாகி நிலத்தைச் செழிப்பிக்கின்றன. தேவர்கள் அம்மலையை விரும்பி அதில் வசித்து வருகிறார்கள். அதன் பெருமை அளவற்றது. ஒருகாலத்தில் விந்தம் என்ற மலைக்கு அதன் சிறப்பைக்கேட்டுப் பொறாமை உண்டாயிற்று. அம்மூடமலை 'பனிமலையின் சிறப்புக்களுக்கு அம்மலை அதிகமாக உயர்ந்து வளர்ந்திருப்பது தான் காரணம்; நாம் அதனைக் காட்டிலும் உயரமாக வளர்ந்துவிட்டால், அம்மலை அவமானத்தினால் வருந்தி அழிந்துபோய்விடும்' என்று எண்ணிக்கொண்டு அன்றுமுதல் அதிகமாகவளர்ந்து ஆகாசத்தை மறைக்கத் தொடங்கிற்று.

பின்னர் ஒரு சமயத்தில் அகஸ்திய முனிவர் அந்த வழியில் வந்தார். விந்தமலை அவரைக்கண்டு 'ஐயா! எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று வினவிற்று. அவர் 'மலையரசனே! நான் இமயமலையிலிருந்து வருகிறேன்' என்று விடை கூறினார். விந்தம் 'முனிவரே! என்னைப் பாருங்கள்! நான் அந்த இமய மலையைக் காட்டினும் இரண்டுமடங்கு அதிகமாக வளர்ந்திருக்கிறேன்; அம்மலை இப்பொழுது இருக்கும் இடமே தெரியவில்லை; அப்படியே கிடந்து அழிந்து போகட்டும்:

இன்னமும் அதன் கருவம் அடியோடு அடங்கித் தொலைய வேண்டும்' என்று சந்தோஷமாசச் சொல்லிச் சிரித்தது. முனிவர் அதன் கருவத்தை அறிந்து அம்மலையைத் தரை மட்டமாக அடக்கித் தவம்செய்யச் சென்றார். அப்புறம் அம்மலை தலை நிமிரவேயில்லை. அதுபோல நாமும் பிறர் மீது பொறாமைகொண்டு பேசலாகாது. **ஸ்காந்தம்.**

ஔவியம் பேசேல்.

**ஔவியம்-பொறாமை வார்த்தைகளை, பேசேல் – (நீ) பேசாதே.**

13. சில வருஷங்களுக்கு முன்னர் சென்னபட்டணத்தைச் சார்ந்த மைலாப்பூரில் திருவள்ளுவர் என்று ஒரு தெய்வத் தன்மை பொருந்திய புலவர் இருந்தார். அவர் மாணாக்கருக்கு ஏலேலசிங்கன் என்று பெயர். அவன் வணிகஜாதி. வர்த்தகம் ஜீவனம். மிகுந்த செல்வம் உள்ளவன். ஒரு சமயத்தில் அவன் அதிகமான தானியங்களை விலைக்கு வாங்கி வீட்டில் கட்டிவைத்திருந்தான். அப்பொழுது நாட்டில் மழை பெய்யாமல் விளைவு குறைந்து பஞ்சம் பரவிப் பிடிக்கத் தொடங்கிற்று. ஜனங்கள் பணத்தை வைத்துக்கொண்டு தானியம் கிடைக்காமல் பசியால் வருந்தினார்கள். அதனை அறிந்த திருவள்ளுவர் தனது மாணாக்கனாகிய ஏலேலசிங்கனை நோக்கி 'உன்னிடம் இருக்கும் தானியங்களை இப்பொழுது விற்கும் விலைக்கு அரைப்பங்கு அதிகமாக விலைசொல்லி விற்பனை செய்' என்று சொன்னார். அவன் குருவின் கட்டளையின் படி தானியங்களை விற்கத் தொடங்கினான்.

நெற்குவியல் குறையாமல் அளக்க அளக்க அதிகமாகப் பெருகி வளர்ந்து வந்தது. மழை பெய்து பஞ்சம் தெளியும் வரையில் மாதக்கணக்காக அளந்து வந்தும்கூட அவன் தானியராசி கொஞ்சமும் குறைவடையவில்லை.

அவன் கையும் மெய்யும் சலித்து அதனைக் குருவுக்குக் கூறினான். அவர் 'நீ இப்பொழுது விற்கும் விலைக்குக் கால்பங்கு குறைத்துக்கொடு' என்றார். ஏலேலசிங்கன் அங்ஙனமே குறைத்துக் கொடுத்தான். அதுவரையில் அழியாமல் வளர்ந்துவந்த அந் நெற்குவியல் அரை நிமிஷத்தில் குறைந்து ஒழிந்து போயிற்று. தானிய விலையை அதிகப்படுத்தி அளப்பதனால் வளர்ச்சியும், குறைத்து அளப்பதனால் நாசமும் உண்டாகும் என்று இதனால் தெரிகின்றதல்லவா? **திருவள்ளுவர் சரித்திரம்.**

அஃகம் சுருக்கேல்.

**அஃகம்-(தானியங்களின்) விலையை, சுருக்கேல்-(நீ) குறைத்து அளவாதே.**

14. ஒருகாலத்தில் பிரமனும் விஷ்ணுவும் சிவபெருமானுடைய முடியையும் அடியையும் கண்டுவரச் சென்றார்கள். பிரமன் அன்னப்பறவை வடிவமாக ஆகாயத்தில் நெடுந்தூரம் வரையில் பறந்து பார்த்தும் கூடக் கடவுள் முடி அதற்குமேலும் வளர்ந்திருந்தது. அவன் என்ன செய்யலாம் என்று யோசிக்கும் தருணத்தில் ஒரு தாழைமலரைக் கண்டான். அது நிலத்தை நோக்கி வந்துகொண்டிருந்தது. பிரமன் 'நீ எங்கிருந்து வருகிறாய்?' என்று கேட்டதற்கு அம்மலர் 'கடவுள் சிரத்திலிருந்து வருகிறேன்' என்று விடை சொல்லிற்று. பிற்பாடு, தான் கடவுள் முடியைக் கண்டதாக அம்மலரைத் தனக்குச் சாக்ஷி சொல்லும்படி ஏற்பாடு செய்துகொண்டு, நிலத்துக்குவந்து ஸ்ரீ மகா விஷ்ணுவைக்கண்டு 'நான் கடவுள் முடியைக் கண்டுவந்தேன்; அதற்கு இந்த மலர் சாக்ஷி' என்று சொன்னான். தாழைமலரும் 'ஆம், ஐயா! இவர் கண்டார்; நான் பார்த்தேன்' என்று பொய்ப் பேசிற்று.

உடனே கடவுள் கோபத்தோடு தோன்றிப் 'பொய்ச் சாக்ஷி சொன்ன தாழைமலர் இனித் தம் பூஜைக்கு உதவாது' என்றும் 'பொய்ப் பேசின பிரமனுக்கு உலகத்தில் கோயில் இராது' என்றும் சொல்லி மறைந்தார். அது முதல் தாழைமலர் சிவபெருமான் பூஜைக்கு யோக்கியமில்லாமல் போயிற்று. பிரமனுக்கும் கோயில் கட்டுவதில்லை. ஆதலால், கண்டொன்றைக்கண்டு ஒன்றை மற்றொன்றாக மாற்றிச் சொல்லலாகாது. **ஸ்காந்தம்.**

## கண்டொன்று சொல்லேல்.

***கண்டு-(ஒன்றைக்) கண்டு, ஒன்று-மற்றொன்றாக, சொல்லேல்-(நீ) சொல்லாதே.***

15. வடமதுரையில் வசுதேவர் என்பவருக்குக் கிருஷ்ணன் என்று ஒருபுத்திரன் பிறந்தான். அவன் ஆயர்ப்பாடி என்னும் ஊரில் நந்த கோபர் என்ற யாதவ அரசர்வீட்டில் சில காரணங்களை முன்னிட்டுக் குழந்தைப் பருவம் முதல் வளர்ந்துவரத் தொடங்கினான். அங்கே அவனுக்கு அநேகம் இடையர் சிநேகமானார்கள். அவன் உலகத்தில் இருக்கும் வரையில் அந்த யாதவர்களுக்கு ஒரு குறையும் நேரவொட்டாமல் காப்பாற்றிக்கொண்டு வந்தான். காட்டில் ஆடு மாடுகளை மேய்த்துக் காலம் கழித்து வந்த அந்த இடையர்களை யெல்லாம் தன்னைப்போல அரசர்களோடு சம்பந்தம் செய்துகொள்ளப் பண்ணினான். இன்னும், தான் செய்யவிரும்பும் ஒவ்வொரு காரியத்தையும் அவர்களோடு ஆலோசனைசெய்து ஒவ்வொரு சபையிலும் அவர்களுக்குப் பெருமையை உண்டாக்கினான். அவனைப்போல ஒவ்வொருவரும் தம்மை விரும்பும் சுற்றத்தாரைக் காப்பாற்றவேண்டும். **பாகவதம்.**

ஙப்போல் வளை.

*ஙப்போல்—ஙகரமானது (பதங்களில் கலந்து வாராத ஙா, ஙி, ஙீ முதலான தன் இனத்தை முன்னின்று தழுவி அவற்றிற்குப் பெருமை உண்டாக்குவது) போல, வளை-(நீ உன் இனத்தாரைத்) தழுவு.*

16. ஆ முன்னாளில் புசுண்டர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவர் கோமதி என்னும் ஆற்றில் தினம் மூன்று வேளைகளிலும் தவறாமல் நீராடி வருவார். அதனால், அவர் தமது தேகசுகம் கொஞ்சமும் கெடாமல் ஆயிரக் கணக்கான வருஷங்கள் வரையில் இருந்து அரிய தவம் செய்து வந்தார். அவர் ஒரு சமயம் அகஸ்திய முனிவரிடத்தில் 'கோமதியாற்றின் இனிய ஊற்று நீர் தான் தமக்கு நித்திய யௌவனத்தைக் கொடுத்தது' என்று சொல்லி யிருக்கிறார். அவரைப்போல விடியற் காலையில் அனைவரும் எழுந்து ஊற்று நீரில் நீராட வேண்டும்.

**சரக ஸம்ஹிதை.**

சனி நீர் ஆடு.

*சனிநீர் — (புதிய) ஊற்று நீரில், ஆடு — (நீ தினமும்) நீராடு.*

b நவக்கிரகங்களில் ஒருவராகிய சனிபகவானுக்குச் சொந்தமான தினத்தைச் சனிக்கிழமை என்பார்கள். அவருக்கு எள்ளில் மிகவும் இஷ்டம். அவர் அருளை விரும்புகின்றவர் அந்தணருக்கு எள்ளைத் தானம் பண்ணுவதும், எள்ளன்னம் இடுவதும் வழக்கம். அனைவரும் எள்ளின் நெய்யைத் தேய்த்துக்கொண்டு சனிக்கிழமையில் நீராடுவதனால், அக்கடவுளின் அநுக்கிரகத்துக்கு ஒருவாறாகச் சொந்தமாகிறார்கள். ஆதலால், சனிக்கிழமை தோறும் எண்ணெய் இட்டுக்கொண்டு ஸ்நானம் செய்யவேண்டும்.

**நவக்கிரக மான்மியம்.**

### சனி நீர் ஆடு.

**சனி-சனிக்கிழமை தோறும், நீர் ஆடு – (நீ எண்ணெய் இட்டுக் கொண்டு) தலை முழுகு.**

17. முன்னாளில் இலங்கைத் தீவில் இராவணனென்று ஒரு துஷ்ட அசுரன் இருந்தான். அவன் வனத்தில் இராமர் மனைவியான சீதை என்பவளை அவர் இல்லாத சமயம் பார்த்துத் தூக்கிக்கொண்டு சென்று அசோக வனம் என்ற தனது காவற்சோலையில் அவளைச் சிறை வைத்திருந்தான். அது காரணமாக இலங்கைப் பட்டினத்தில் இராமருக்கும் இராவணனுக்கும் பெருஞ்சண்டை நடந்தது. முதல் நாளிலேயே இராமரும் இராவணனும் ஒருவரை யொருவர் எதிர்த்து யுத்தம் பண்ணத் தொடங்கினார்கள்.

இராமபாணங்கள் ஒன்றின்மேல் ஒன்றாக தடுக்க முடியாமல் வந்து பாய்ந்தபடியினால் இராவணனுக்குத் தேர் முதலானவை அழிந்துபோயின. வாள் முதலிய ஆயுதங்களும் முறிந்துவிட்டன. அவன் மிகவும் கீர்த்திபெற்ற உயர்ந்த வீரன். அவனுக்குப் பகைவனை ரணகளத்தில் உயிரோடு உலாவவிட்டு வீடு செல்ல மனம் வரவில்லை. அவமானத்தாலும் வருத்தத்தாலும் அதிகமாக வருந்தி நிலத்தைப் பார்த்தவண்ணமே மரம்போல நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது இராமர் அவனது அக்கிரமங்களை மனத்தில் கொள்ளாமல் 'வீரனே! பயப்படாதே; நீ இன்று யுத்தத்தில் மிகவும் இளைத்துப் போனாய்; இளைத்த சமயத்தில் உன்னைக் கொல்வதற்கு நான் இஷ்டப்படவில்லை; இப்பொழுது அரண்மனை சென்று இளைப்பாறு; சண்டை செய்ய மனமிருந்தால், நாளைக்குத் தகுந்த வீரர்களைத் துணை சேர்த்துக்கொண்டு

வா!' என்று இன்சொல் சொல்லி அழைப்பினார். அவரைப் போல நாமும் பகைவனிடத்திலும் இனிமையாகப் பேச வேண்டும்.

**இராமாயணம்.**

## ஞயம்பட வுரை.

**ஞயம்பட-(பேச்சுக்களில்) இன்பம் விளையும்படி. உரை-நீ பேசு.**

18. விரிஞ்சிபுரத்தில் ஆபத்துக்காத்த முதலியார் என்று ஒரு வேளாளர் இருந்தார். அவர் அதிகமான பொருளைச் செலவு செய்து அரண்மனை போன்ற ஒரு பெரிய வீட்டைக் கட்டினார். அந்த வீட்டில் வசிப்பதற்கு அவரும் அவர் மனைவியும் தான் இருந்தார்கள். அநேகம் அறைகள் அவருக்கு அநாவசியமாகி மூடினபடியே கிடந்தன. அவற்றைத் திறப்பதற்கு அவசியமும் ஒழிவும் அவருக்கு உண்டாகவேயில்லை. ஆதலால், ஓரறையில் எறும்புகள் முட்டை இட்டன. ஓரறையில் பாம்புகள் வசித்து வந்தன. ஓரறையில் கறையான்கள் புற்றை வளர்த்தன. ஓரறையில் ஆந்தை கோட்டான் முதலான பறவைகள் சாளரங்களின் வழியாகக் குடிபுகுந்தன. தேனீக்கள் ஓரறையின் முகட்டில் கூடு கட்டின. ஓரறையைப் பேய்கள் பிடித்துக்கொண்டு வந்தவர்களை வெருட்டியோட்டின. இங்ஙனம் அவர் வீடு, கட்டி முடிந்த சில வருஷங்களுக்குள்ளாகவே குடியிருப்பதற்குப் பயன்படாமல் சீர்குலைந்து போயிற்று. முதலியார் கஷ்டத்துக்கும் நஷ்டத்துக்கும் சொந்தமாகித் தம் மனைவியோடு வேறு வீட்டுக்குப் போனார். அவரைப்போலவே நாமும் அதிக இடம் உண்டாகும்படி வீடு கட்டலாகாது.

**தொண்டைமண்டல சதகம்.**

## இடம்பட வீடிடேல்.

**இடம் - இடமானது, பட-(வீணாகக்) கிடக்கும்படி, வீடு - வீட்டை; இடேல் - (நீ பெரிதாகக்) கட்டாதே.**

19. அத்தினபுரத்தில் இருந்த ஜனமேஜயன் என்ற மன்னவன் பாண்டவர் வம்சத்தில் பிறந்தவன். அவன் தந்தையைத் தக்ஷகன் என்ற பாம்பு கடித்துக் கொன்று விட்டது. அதனால் ஜனமேஜயன் கோபம் கொண்டு உலகத்தில் உள்ள பாம்புக் கூட்டங்களையெல்லாம் அடியோடு நாசம் செய்வதன் பொருட்டுச் சர்ப்பயாகம் என்ற ஒரு வேள்வியைச் செய்தான். அந்த யாக நெருப்பில் எல்லாப் பாம்புகளும் விழுந்து இறந்து போயின. தக்ஷகன் என்ற சர்ப்பராஜன் மாத்திரம் அங்ஙனம் இறந்து போகவில்லை. அவன் தேவர்களுக்குத் தலைவனான இந்திரனுக்கு நெருங்கின நண்பன். இந்திரன் அந்த யாகத்தில் மிகவும் கஷ்டப்பட்டு அவ்வரசனை வேண்டிக்கொண்டு தன் நண்பனுக்கு ஆபத்து நேரவொட்டாமல் காப்பாற்றினான். இல்லாவிட்டால், அவன் நிச்சயமாக அந்த யாகத்தில் இறந்து போயிருப்பான். ஆதலால், தக்ஷகனைப்போலவே ஒவ்வொருவரும் சிநேகம் செய்வதற்குரிய நற்குணமும் உள்ளவர்களை அறிந்து நட்புச் செய்யவேண்டும்.

**மகாபாரதம்.**

இணக்கம் அறிந்திணங்கு.

**இணக்கம்-சிநேகத்துக்குரிய(நற்குண நற்செய்கை உள்ளவர்களை), அறிந்து - தெரிந்து கொண்டு, இணங்கு – நீ சிநேகம் பண்ணு.**

20. ஸிஸிலித்தீவில் எட்னா என்று ஒரு எரிமலை உண்டு. எரிமலைகளின் உச்சியிலிருந்து சில சமயங்களில் நெருப்பும் உருகின கற்குழம்பும் அதிகமாக எரிந்து வெளியில் வரும். அந்தக் குழம்பு பக்கங்களிலுள்ள கிராமங்களிற் பெருகி அவற்றை அடியோடு நாசம் செய்துவிடும். ஒரு சமயத்தில் அம்மலை அம்மாதிரி கற்குழம்பை அதிகமாகக் கக்கத் தொடங்கிற்று. அப்பொழுது அருகில்

உள்ள ஜனங்கள் தங்கள் உயர்ந்த பொருள்களை எடுத்துக் கொண்டு உயிர் பிழைக்க ஓடினார்கள். அச்சமயத்தில் ஒரு கிராமத்தில் இருந்த இரண்டு சகோதரர் மற்றவர் களைப் போலத் தாங்களும் விலை உயர்ந்த பொருள்களைத் தலையிற் சுமந்து வயது சென்ற தாயும் தந்தையும் தங்களைத் தொடர்ந்து வர ஓடத் தொடங்கினார்கள். கிழவர்களுக்குத் துரிதமாக நடக்க முடியவில்லை. சகோதரர் சிறிது சென்றதும் திரும்பிப் பார்த்துப் பெற்றவர்களின் கஷ்டத்தைக் கவனித்துத் 'தலையில் உள்ள பொருள்களைக் காட்டிலும் பெற்றுவளர்த்த தாயும் தந்தையும் சிறந்தவராவர்; பொருளைச் சம்பாதிக்கலாம்; அவர்களை அங்ஙனம் சம்பாதிக்கமுடியாது' என்று தீர்மானித்து, அவற்றை எறிந்துவிட்டு ஒருவன் தந்தையையும் மற்றவன் தாயையும் தூக்கிக்கொண்டு போய்ப் பத்திரமானவிடத்தில் சேர்த்தார்கள். அவர்கள் சென்ற வழிக்கு அன்று முதல் ஸத்புத்திரமார்க்கம் என்று பெயர் உண்டாயிற்று. அதனைக் கேள்வியுற்ற அத்திவரான், அந்த அருமைச் சகோதரர்களை வரவழைத்து மரியாதை செய்து தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டான். ஆதலால், நாமும் அவர்களைப்போலத் தந்தை தாய்களைக் காப்பாற்ற வேண்டும்.

### தந்தை தாய்ப் பேண்.

**தந்தை - தகப்பனையும், தாய் - தாயாரையும், பேண் - நீ காப்பாற்று.**

21. 17-வது கதையில் இலங்கைப் பட்டினத்தில் இராவணன் ஸீதையைச் சிறை வைத்திருந்தான் என்று படித்திருக்கிறீர்கள். ஸீதை ஒன்பதுமாதம் வரையில் அங்கேயே இருந்தும் இராமர் வந்து சிறைமீட்கவில்லை. அவள்

அதனால் வெறுப்படைந்து இறப்பதற்கு நிச்சயித்திருந்தாள். அச்சமயத்தில் அநுமான் என்ற வானரவீரன் அங்குச் சென்று வணங்கி, இராமர் கணையாழியைக் கொடுத்தும், அவர் க்ஷேமத்தைச் சொல்லியும் அவளுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணினான். சீதை தன் மரணத்தை நீக்கும் பொருட்டுச் சமயத்தில் செய்த அவ்வுதவிக்கு மனமகிழ்ந்து அவன் சிரஞ்சீவியாக என்றும் இறவாமல் இருக்கும்படி வரம் தந்து தன் நன்றியறிதலை விளக்கினாள். சீதையைப்போலவே நாமும் ஒருவர் செய்த உதவியை மறக்கலாகாது. **இராமாயணம்.**

நன்றி மறவேல்.

***நன்றி* - (ஒருவர் செய்த) உதவியை, *மறவேல்* - (நீ எப்பொழுதும்) மறந்துவிடாதே**

22. கிரிவிரஜம் என்னும் பட்டணத்தில் ஜராசந்தன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் வரத்திலும் பலத்திலும் மிகுந்தவன். தைரியத்தில் சிறந்தவன். ஒரு சமயம் அவன் வடமதுரையில் இருந்த கண்ணபிரானோடு சண்டை செய்ய வந்தான். அவனை யுத்தத்தில் வெற்றி கொள்வதற்கு அவரால் முடியாமற் போயிற்று. இரண்டு மூன்று நாட்கள்வரையில் சண்டை செய்து அபஜயம் அடைந்துவிட்டார். அடுத்த வருஷத்திலும் அதற்கு அடுத்தவருஷத்திலும் அவன் படைகளைத்திரட்டி வந்து மதுரைப் பட்டணத்தை முற்றுகை இட்டான். ஒரு தடவையிலாவது கண்ணபிரானுக்கு வெற்றியுண்டாகவில்லை. அவன் எதிர்த்துவந்த பதினெட்டுத் தடவைகளிலும் அவர் தோல்வியடைந்துபோனார். அவன் மற்றொரு சமயத்தில் பலராமனும் கண்ணபிரானும் ரைவதகம் என்ற மலையில் இருக்கும் பொழுது அதன் அடிவாரத்தை

நெருப்பு வைத்துக் கொளுத்தி விட்டான். அவன் உபத்திரவத்தைச் சகிக்கமுடியாமல் கண்ணபிரான் வடமதுரையை விட்டுத் தொலைத்துத் துவாரகையில் குடியேறினார். சிலகாலம் கழிந்தபிற்பாடு, அவர் பாண்டவரில் ஒருவனை பீமசேனனை அழைத்துக்கொண்டு ஜராசந்தன் பட்டணம் சென்று பீமனுக்கும் அவனுக்கும் மல் யுத்தத்தை உண்டு பண்ணினார். அந்தச் சண்டையில் ஜராசந்தன் இறந்து போனான். கண்ணபிரான் தமக்கு வெற்றியுண்டாகும் சமயத்தை அறிந்து பீமசேனனைக் கொண்டு பகைவனை வென்று கீர்த்தியடைந்தார். அவரைப்போல ஒவ்வொருவரும் காரியம் விளைந்து பலன்கொடுக்கும் காலத்தை அறிந்து செய்யவேண்டும். **மகாபாரதம்.**

## பருவத்தே பயிர்செய்.

**பருவத்தே - (ஒவ்வொன்றும் விளையும்) காலத்தில் (அல்லது ஒவ்வொரு காரியமும் விளைந்து பயன்தரும் காலத்தில்) பயிர்செய் - (நீ காரியமாகிய) பயிரைச் செய்.**

23. 2-வது கதையில் துரியோதனன் பாண்டவர்களின் இராஜ்யத்தைச் சூதாட்டத்தில் அபகரித்துக் கொண்டு அவர்களையும் தூஷித்துப் பேசினான் என்று படித்திருக்கிறீர்கள். அப்பொழுது சபையில் இருந்த பெரியவர்கள், பாண்டவர் வனத்தில் பன்னிரண்டு வருஷமும், நாட்டில் ஒருவரும் அறியாமல் ஒரு வருஷமும் வசிக்க வேண்டும் என்றும், அதன் பின்னர்த் துரியோதனன் அவர்களிடம் அபகரித்துக் கொண்ட ராஜ்யங்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். பாண்டவர் தருமத்துக்குப் பயந்து ஒன்றும் மறுத்துச் சொல்லாமல் அப்படியே வனம் சென்று விட்டார்கள். ஆனாலும், துரியோதனனுக்கு அவர்களிடம்

பறித்துக் கொண்ட ராஜ்யத்தினால் கொஞ்சமும் மன அமைதி உண்டாகவில்லை. பாண்டவர் திரும்பி வந்து தன்னோடு சண்டை தொடங்குவார்கள் என்று அவன் இரவும் பகலும் எண்ணமிட்டு வருந்தத் தொடங்கினான். பின்னர்த் தவணைப்படி பதின்மூன்று வருஷமும் கழித்துத் திரும்பிவந்த பாண்டவர்களுக்கு அவன் சிறிதும் இராஜ்யம் கொடுக்கமாட்டேன் என்று மறுத்துவிட்டான். அதனால் குருக்ஷேத்திரத்தில் அவ்விருவருப் பாருக்கும் சண்டை ஆரம்பமாயிற்று. அந்த யுத்தத்தில் அவன் தன்று அக்கிரமங்களின் பலனைத் தன்னைச் சேர்ந்த அனைவரையும் தொலைத்துக்கொண்டு தானும் இறந்துபோனான். ஆதலால், நாமும் அநியாயமாகப் பிறர் பொருள்களை அபகரிக்கலாகாது. **மகாபாரதம்.**

மண்பறித் துண்ணேல்.

**மண்** - (பிறருக்குச் சொந்தமான) நிலத்தை, **பறித்து**-(அக்கிரமமாக) அபகரித்து, **உண்ணேல்** - நீ ஜீவனம் பண்ணாதே.

24 முன்னொரு காலத்தில் காசிப முனிவருக்கு இரணியன் என்று ஒரு புத்திரன் பிறந்தான். அவன் அதிகமான தவங்களைச் செய்து பிரமதேவனிடத்தில் உயர்ந்த வரங்களைப் பெற்றான். அவனைப் போல யோசித்து வரம்பெற்றவர் ஒருவரும் இல்லை. பெரும் பாலும் அவன் அவ்வரத்தின் வண்ணம் இறவாதிருக்க வேண்டும். ஆனால் அவ்விதம் நடக்கவில்லை. நெடுங்காலம் வரையில் அவன் அசுரர்களுக்குச் சக்ரவர்த்தியாக விளங்கினான். பிற்பாடு, கடவுள் பெயருக்குப் பதிலாகத் தனது

* 'மன்று பறித்துண்ணேல்' என்றும் பாடம். இதற்கு, "மன்று—நியாய சபையில் இருந்துகொண்டு, பறித்து - பிறர் பொருள்களை அக்கிரமமாக அபகரித்து, உண்ணேல் - நீ ஜீவனம் பண்ணாதே" என்று பொருள். இதற்கும் கதை பொருந்தும்.

பெயரைச் சொல்லவேண்டும் என்றும், தன்னையே கடவுள் என்று கொண்டாடவேண்டும் என்றும் அனைவரையும் கட்டாயப்படுத்தத் தொடங்கினான். அப்படிச்செய்யாத வர்களைக் கண்டுபிடித்துக் கழுவில் ஏற்றி வந்தான். உலக விரோதமான அந்தக் கொடுஞ்செய்கைக்காக ஸ்ரீ மகா விஷ்ணு நரஸிங்கவடிவமாக வந்து அவனைக் கொன்றுவிட்டார். ஆதலால், இரணியனைப்போல எவரும் உலக இயல்புக்கு விரோதமான காரியங்களைச் செய்யலாகாது.

**பாகவதம்.**

இயல்பலாதன செயேல்.

***இயல்பு அலாதன* - (உலக) இயல்புக்கு விரோதமான காரியங்களை, *செயேல்* - நீ செய்யாதே.**

—o:o—

25. மதுரைப்பட்டணத்தில் முத்து வீரன் என்று ஒரு பாம்பாட்டி இருந்தான். அவன் தினந்தோறும் பாம்புகளைப் பிடித்துக் கொண்டுவந்து ஆட்டி ஜீவனம் பண்ணுவது வழக்கம். ஒருநாள் அவன் வீட்டுக்குச் சில விருந்தினர் வந்தனர் அவன் அவர்களைச் சந்தோஷப் படுத்தும்பொருட்டு ஒரு பாம்பை வெளியில் எடுத்து ஆட்டத்தொடங்கினான். அஃது அவன் அன்று காலையில் பிடித்துக்கொண்டுவந்த ஒரு புதியபாம்பு. அப்பாம்பு வெளியில் வந்ததும் அவனையும் அவன் நண்பர்களையும் நன்றாகக்கடித்துச் சென்றுவிட்டது. அவர்கள் அனைவரும் ஒருமிக்க இறந்துபோனார்கள். பாம்புகளைப்பிடித்து ஆட்டுவதனால் மரணம் வரும் என்று இதனால் வெளியாகின்றதல்லவா?

**கதாமஞ்சரி.**

அரவம் ஆட்டேல்.

***அரவம்* - பாம்புகளை, *ஆட்டேல்* - நீ பிடித்து ஆட்டாதே.**

—o:o—

26. முன்பு கௌடதேசத்தில் இருந்த கிரயுஞ்ச மன்னவனுக்கு அஜீர்ண நோய் உண்டாயிற்று. அரண்மனை வைத்தியர்கள் அஃது அசாத்தியமான நோய் என்று கைவிட்டுவிட்டார்கள். பின்னர் மண்டிகர் என்னும் ஒரு முனிவர் வந்து பரிசுத்தமான இலவம்பஞ்சு மெத்தையில் அவனைப் படுக்கவிட்டு ஔஷதம் கொடுத்துக்கொண்டு வந்தார். சில நாட்களில் அவ்வரசன் தனது நோய் முற்றிலும் நீங்கிச் சுவஸ்தம் அடைந்தான். அந்தப் பெரிய முனிவர் மற்றொருநாள் இராஜ சபையில் 'இலவம்பஞ்சின் படுக்கையும், ஒரே அளவைக்கொண்ட எளிய ஆகாரமுமே அரசனுக்குக் குணத்தை உண்டுபண்ணின. இலவம்பஞ்சு உடம்பின் உஷ்ணத்தைக்காக்கும். உண்டவுணவை ஜீர்ணப்படுத்தும். நித்திரையை உண்டுபண்ணும்' என்று எடுத்துரைத்தார். ஆதலால், நாமும் இலவம்பஞ்சு மெத்தையில் படுத்துக்கொள்ள வேண்டும். அஷ்டாங்க ஹ்ருதயம்.

இலவம்பஞ்சில் துயில்.

இலவம் பஞ்சில் - இலவம் பஞ்சினாற் (செய்த படுக்கையில்,) துயில்—நித்திரைசெய்.

—∽∾—

27. குருக்ஷேத்திரம் என்பது அஸ்தினாபுரத்துக்கு அருகில் உள்ள ஒரு பெரிய மைதானம். அதில் பாண்டவரும் துரியோதனாதியரும் பாகவிஷயமாகப் பதினெட்டு நாள் வரையில் பெருஞ்சண்டை புரிந்தார்கள். அதற்குப் பாரதச்சண்டை என்று பெயர். பதினெட்டாவது நாள் பிற்பகலில் துரியோதனனைச் சார்ந்த வீரர் யாவரும் மடிந்துபோக அவன் ஒருவன்மாத்திரம் மிஞ்சியிருந்தான். பின்னர் ஸ்யமந்த பஞ்சகம் என்ற மடுக்கரையில் அவனுக்கும் பீமசேனனுக்கும் கதாயுத்தம் மூண்டது. துரியோதனன் வஞ்சனை மேற்கொண்டு பீமசேனனை நோக்கிப் 'பீமா!

இருவரும் உயிர் நிலைகளைச் சொல்லிச் சண்டைசெய்யலாம் என்றான். பீமன் 'தன் உயிர்நிலை தலையில்' என்று சொல்லி 'உன் உயிர்நிலை எங்கே?' என்று கேட்டான். துரியோதனன் 'எனக்கும் தலையில்தான்' என்று வஞ்சனை பேசினான். அவனுக்கு உயிர்நிலை தொடையில் இருக்கிறதென்று கிருஷ்ணன் அவன் சூதைக் குறிப்பாய்த் தெரிவித்தான். உடனே பீமன் கோபம்கொண்டு துரியோதனனைக் கொன்றுவிட்டான். அவனைப்போல நாமும் பிறரை வஞ்சிக்கலாகாது. **மகாபாரதம்.**

## வஞ்சகம் பேசேல்.

**வஞ்சகம்—கபடமான வார்த்தைகளை, பேசேல்-நீ பேசாதே.**

28. 24-வது கதையைப் படித்துக் கொள்க.

## அழகலாதன செய்யேல்.

**அழகு அலாதன - அழகு அல்லாதன வாகிய (உலக இயல்புக்கு விரோதமான காரியங்களை), செய்யேல்-நீ செய்யாதே.**

29. அத்தினபுரத்தில் சந்தனு என்று ஒரு சக்ரவர்த்தி இருந்தார். அவருக்குக் கங்கை பரிமளகந்தி என்று இரண்டு மனைவிகள் இருந்தார்கள். மூத்தமனைவியான கங்கையின் வயிற்றிற்பிறந்த புத்திரருக்குத் தேவவிரதா என்று பெயர். அவர் தமது சிறுபிராயத்திலேயே தாயாரின் முயற்சியினால் எல்லாச் சாஸ்திரங்களிலும் எளிதில் தேர்ச்சியடைந்தார். அவருக்கு வசிஷ்டமுனிவர் வேதங்களை ஓதுவித்தார். பிருகஸ்பதி சாஸ்திரங்களைக் கற்பித்தார். சுக்கிரபகவான் மந்திரங்களை உபதேசித்தார். பரசுராமர் வில்வித்தையைப் பயிற்றுவித்தார். அவர் தமது சிறுவயதிலேயே உலகத்தில் உள்ள எல்லாப் பண்டிதர்களையும்விடக் கல்வியில் மிஞ்சி விளங்கினார். அவரைப்போல

நாமும் பாலியத்திலேயே கல்வியை விரும்பிக் கற்க வேண்டும்.

மகாபாரதம்.

இளமையில் கல்.

**இளமையில் – இளமைப பருவத்திலேயே, கல் – (நீ கற்கவேண்டிய நூல்களைக்) கற்றுக்கொள்.**

30. 27-வது கதையில் பாண்டவருக்கும் துரியோதனனுக்கும் குருக்ஷேத்திரம் என்ற மைதானத்தில் பதினெட்டுநாள் வரையில் பெருஞ்சண்டை நடந்ததென்று படித்திருக்கிறீர்கள். அதில் பதினேழாவதுநாள் யுத்தத்தில் கர்ணன் என்பவன் அர்ச்சுனனோடு கடுஞ்சண்டை செய்தான். அர்ச்சுனன் விட்ட அம்புகள் ஒன்றின்மேல் ஒன்றாகவந்து கர்ணன் உடம்பில் பொத்துக்கொண்டபடியினால் அவன் அப்படியே தேர்த்தட்டில் சாய்ந்து மூர்ச்சை போய்விட்டான். அவன் நாள்தோறும் யாசகர்களும் பிச்சைக்காரர்களும் வந்து தன்னை எது கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் அன்புடன் அளித்துவருவது வழக்கம். அவன் செய்துவந்த அந்தத் தருமத்தினால் அவ்வாபத்துக்காலத்தில் ஒரு தெய்வவீரன் திடீரென்று தோன்றி அவன் களைதெளியும் வரையில் அவன் அருகில் நின்று உபசாரம் செய்துகொண்டிருந்தான். கர்ணன் அவ்வுபசாரத்தினால் களைதெளிந் தெழுந்து அவனை 'நீ யார்?' என்று கேட்டான். அவ்வீரன் 'நான் கடவுள் அனுப்ப வந்தவன். அவர் உனது தருமத்தை மெச்சி உனக்கு உதவிசெய்து வரும்படி என்னை அனுப்பினார்' என்று சொல்லி உடனே மறைந்துபோனான். கர்ணன் தருமம் செய்திராவிட்டால், அவ்வாபத்துச்சமயத்தில் தெய்வவீரன் உதவியை அடைந்திருக்க முடியாதல்லவா?

மகாபாரதம்.

அறனை மறவேல்.

**அறனை-தருமத்தை, மறவேல் - நீ (ஒருபோதும்) மறக்காதே**

31. 17-வது கதை இராவணனைப்பற்றி உங்களுக்கு ஒருவாறு தெரிவித்திருக்கின்றது. அந்த இராவணனுக்குக் கும்பகர்ணன் என்று ஒரு சகோதரன் இருந்தான். அவன் மிகவும் உயர்ந்த வீரன். அவனுக்கு எப்பொழுதும் தூங்கிக்கொண்டிருப்பதில் ஆசை அதிகம். அதனால், இரவிலும் பகலிலும் அவன் அரண்மனையில் படுத்துத் தூங்கிக்கொண்டே யிருப்பான். தனது மூத்த சகோதரனாகிய இராவணன் சீதையை எடுத்துவந்து சிறையில் வைத்ததையும், அதன் பொருட்டு இராமரும் இராவணனும் இலங்கைப் பட்டினத்தில் பெரும்படைகளைத் திரட்டிச் சண்டை செய்வதையும் அவன் கொஞ்சமும் அறியான். மரணதினத்தில் தான் அவற்றை ஒருவாறு அறிந்தான். பின்னர்த் தூக்கம் தெளியாமலேயே அவன் இராவணன் பொருட்டுச் சண்டைசெய்து இரணகளத்தில் இறந்துபோனான். மிகவும் பலசாலியாக விருந்தும் அவன் இறக்கும் வரையில் தூக்கத்தைபல்லாமல் ஒருகாரியத்தையும் செய்யவில்லை. அவனைப்போல ஒருவரும் அதிகமான நித்திரையை விரும்பி அடையலாகாது.

இராமாயணம்

அனந்தல் ஆடேல்.

**அனந்தல்-நித்திரையை, ஆடேல் - (நீ மிகுதியாகச்) செய்யாதே.**

32. விதேக ராஜ்யத்தை முதலில் ஏற்படுத்தியவருக்கு நிமிசக்ரவர்த்தி என்று பெயர். அவர் ஒருசமயம் தமக்கு யாகம் செய்விக்க வரும்படி வசிஷ்டமுனிவரைக் கூப்பிட்டார். அவர் 'நான் இந்திரன் செய்யப்போகும் யாகத்தை நடத்தி வைப்பதாக ஒப்புக்கொண்டிருக்

கிறேன், ஆதலின், முதலில் அங்கே செல்லவேண்டும். நீ வேறொரு குருவை வைத்து நடத்திக்கொண்டிரு. அந்த யாகம் முடிந்ததும் வந்துவிடுகிறேன்' என்று சொல்லிப் போய்விட்டார். நிமியும் அவ்வண்ணமே வேறொரு குருவை நியமித்துச் செய்துகொண்டிருந்தார். பாதி யாகம் நடந்த பிறபாடு வசிஷ்ட முனிவர் வந்தார். அவர் தாம் முன்பு சக்ரவர்த்திக்குச் சொன்ன சொல்லை மறந்து மிகவும் கோபங்கொண்டு 'நீ என்னைத் தள்ளி வேறொரு குருவை வைத்துக்கொண்டு யாகம் செய்தபடியினால் பிசாசாகக் கடவாய்' என்று சபித்தார். சக்ரவர்த்தி பொறுமையில்லாமல் என்னைச் சபித்தபடியினால் தாங்களும் சரீரம் இழந்து துன்பமடையக் கடவீர்' என்று குருவுக்குப் பிரதி சாபம் கொடுத்தார். நெடுங்காலம் வரையில் அவர்கள் இருவரும் அவ்வண்ணமேயிருந்து வருந்திவந்தார்கள். ஆதலால், நாம் கடிந்து பேசினாலும் கோபத்தை முதலிலேயே மறந்துவிட வேண்டும் பாகவதம்.

கடிவது மற.

**கடிவது-கோபித்துப் (பேசுவதை,) மற - நீ மறந்துவிடு.**

33 சூரிய வம்சத்தில் சிபி என்று ஒரு சக்ரவர்த்தி இருந்தார். ஒருநாள் அவரிடத்தில் ஒரு புறா வந்து அடைக்கலம் புகுந்தது. நெடுந்தூரத்திலிருந்து அந்தப் பறவையைத் துரத்திவந்த பருந்து ஒன்று சக்ரவர்த்தியை அடைந்து "தருமம் தெரிந்தவரே! இந்தப் பறவை என் உணவு, இதை விட்டுவிடுங்கள்; இல்லையானால், இதன் எடைக்குச் சரியான மாமிசத்தைத் தங்கள் சரீரத்திலிருந்து எனக்குக் கொடுத்துவிடுங்கள்! நான் சந்தோஷமாகப் பெற்றுக்கொண்டு போகிறேன்;' என்று சொல்லிற்று. சக்ரவர்த்தி 'அழகான பறவையே! அப்படியே

தருகிறேன் ; சரியாகப்பெற்றுக்கொள்' என்று துலைக் கோலை நிறுத்தி, ஒரு தட்டில் தமது உடல் மாமிசத்தில் கொஞ்சம் அறுத்து வைத்துத் தூக்கினார். அந்த புறு வின் எடைக்குச் சரிப்படவில்லை. கொஞ்சம் குறைந்திருந் தது. இன்னும் கொஞ்சம் அறுத்து வைத்தார். அது வும் சரிப்படவில்லை. அப்புறம் படிப்படியாகத் தமது உடம்பில் உள்ள எல்லா மாமிசத்தையும் அறுத்து அறுத் துத் துலைத் தட்டில் வைத்தும் புறுவின் எடைக்குச் சரி யாகவில்லை. அவர் முடிவில் ஒன்றும் செய்யத் தோன்று மல் பறவையைக் காப்பாற்றுவதன் பொருட்டுத் தாமே தட்டில் ஏறி நின்று எடையைச் சரிப்படுத்தினார். அவ ரைப்போலப் பிறவுயிர்களைக் கஷ்டப்படாவது காப் பாற்றுவதுதான் சிறந்த விரதமாகும். **மகாபாரதம்.**

காப்பது விரதம்.

**காப்பது - (பிறவுயிர்களுக்குத் தீங்கு வராமல்) காப்பாற்றுவது, விரதம் - (மேலான) விரதமாகும்.**

34. சிலவருஷங்களுக்கு முன்னர்க் குமணன் என்று ஒரு சிற்றரசன் இருந்தான். அவன் மிகுந்த கொடை யாளி; யாசகர்க்கு எவற்றையும் இல்லையென்று சொல்ல மாட்டான். அவனுக்கு இளங்குமணன் என்று ஒரு இளைய சகோதரன் இருந்தான். தன் தமயன் மனம் வந்தபடி செலவழிப்பதில் இளங்குமணனுக்கு அருவருப்புண்டா யிற்று. அதனால், தமயனைக் காட்டில் துரத்திவிட்டு அவன் சிங்காதனத்தில் தான் அமர்ந்து அதிகாரஞ் செலுத்தி வந்தான். குமணன் தம்பிக்குப் பயந்து காட் டில் ஒளிந்துகொண் டிருக்கும்பொழுது பெருஞ்சித்திர னார் என்ற பண்டிதர் ஒருவர் அவனைக்கண்டு 'குமண ராஜனே! நான் இரண்டுநாட்களாக உன்னை இந்தக் காட்

டில் தேடி அலைந்து வருகிறேன். எனக்கு ஏதாவது வெகுமதிகொடு. இப்பொழுது உன்நிலைமையைக் காட்டிலும் என் நிலை மிகவும் தாழ்வடைந்துள்ளது' என்று ஒருசெய்யுள் பாடினார். குமணவரசன் அவருக்குக் கொடுக்க ஒன்றும் இல்லாமையினால் 'புலவரே! என் தலையை எடுத்துக் கொண்டு சென்று என் சகோதரனிடத்தில் கொடுத்து அதன் விலையைப் பெற்றுச் செல்லுங்கள். அதன் விலை பாதிராஜ்யம் என்று அவன் விளம்பரம் செய்திருக்கிறான்' என்றுசொல்லி அவரிடம் வாளைக்கொடுத்துத் தலைகுனிந்து நின்றான். அவனைப்போலவே அனைவரும் பிறருக்கு உபயோகம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். **புறநானூறு.**

## கிழமைப் படவாழ்.

**கிழமைப்பட—(நீயும் உன் பொருளும் பிறருக்குச்) சொந்தமாகும் படி, வாழ்—நீ வாழு.**

35. வெகுகாலத்துக்கு முன்னர்ச் சூரிய வம்சத்தில் வேனன் என்று ஒரு மூட அரசன் இருந்தான். அவன் தனது அற்ப புத்தியினால் முனிவர்களை வாகனமாகக் கொண்டு, அவர்களுக்குப் பலவிதமான உபத்திரவங்களை உண்டுபண்ணி வந்தான். வனத்தில் தவம் புரிந்துவந்த முனிவர்கள் விதியில்லாமல் அவனைச் சுமந்துகொண்டு திரியத் தொடங்கினார்கள். கடவுளைத் தொழுவதற்குக் கூட அவர்களுக்கு ஒழிவு உண்டாகவில்லை. அவர்கள் செய்து வந்த தவங்கள் யாவும் குறையத் தொடங்கின. அவனுக்கு நல்ல வார்த்தைகளினால் பலவிதமான நீதிகளைச் சொல்லியும் அம்முருட்டரசன் கொஞ்சமும் கவனிக்கவில்லை. தனது அதிகாரத்தையே பெரிதாக மதித்து வந்தான். பிற்பாடு, எல்லா முனிவர்களும் ஒன்று சேர்ந்து

அவனைக் கொன்றுவிட்டார்கள். அவனைப்போல நாமும் இழிவான காரியங்களைச் செய்யலாகாது. **பாகவதம்.**

## கீழ்மை யகற்று.

***கீழ்மை*** *- தாழ்ந்த (குணத்தையும்) தாழ்ந்த (செய்கைகளையும்.)* ***அகற்று*** *- நீ நீக்கு.*

36. அஸ்தினாபுரத்தில் இருந்த துரியோதனன் ஒரு சமயத்தில் இராஜ ஸ்திரீகளோடு வனத்தில்வந்து விளையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது சித்திராங்கதன் என்ற கந்தருவனுக்கும் அவனுக்கும் சண்டை உண்டாயிற்று. அச்சண்டையில் அவன் தோற்றுப்போனபடியினால் சித்திராங்கதன் அவனையும், அவன் மனைவிமார்களையும் சிறைசெய்து தேரில் வைத்துக்கொண்டுபோனான். அச்செய்தி அடுத்த வனத்தில் வசித்துவந்த பாண்டவர்களுக்குத் தெரிந்தது. அவர்களில் பீமசேனன் துரியோதனன் சிறைப்பட்டதற்கு மிகவும் சந்தோஷப்பட்டான். தருமபுத்திரர் அதனைக்கண்டு கண்ணீர் சொரிந்து 'பீமா! நீ அறியாமல் பேசுகிறாய். நமக்குள் வருத்தம் இருந்தாலும் பிறருக்கு இடம் கொடுக்கலாகாது; நீ சீக்கிரம் அர்ச்சுனனோடு சென்று துரியோதனனை மீட்டுக்கொண்டு வா! இல்லாவிட்டால், நமது குலத்துக்குப் பெரிய அவமானம் உண்டாகும்' என்று சொல்லி யனுப்பினார். அவனும் அவ்வண்ணமே அர்ச்சுனனோடு சென்று யுத்தம் செய்து கந்தருவனை வென்று அவர்களை அழைத்துக்கொண்டு வந்தான். தருமபுத்திரர் துரியோதனனை நோக்கி! 'இனிப் பெண்களை அழைத்துக்கொண்டு இப்படி அஜாக்கிரதையாக வெளியில் வாராதே' என்று புத்தி சொல்லி உபசரித்தனுப்பினார். ஆதலால், நாமும் அவரைப்போலச்

சத்துருவிடத்திலும் மேலான குணங்களைக் கொண்டிருக்க வேண்டும். **மகாபாரதம்.**

குணமது கைவிடேல்.

**குணம் அது - (மேலான) குணங்களை, கைவிடேல் - நீ கைவிடாதே.**

37. ஆதிநாளில் குந்தி யென்பவள் வயிற்றில் கர்ணன் என்று ஒரு புத்திரன் பிறந்தான். அவன் வளர்பிறை யென்ன வளர்ந்து பாசுராமரிடத்தில் வில்வித்தை கற்றுக் கல்வியில் நிகரற்று விளங்கினன். துரியோதனன் பாண்டவர்களைத் தொலைக்கும் பொருட்டு அவனைத் தனக்கு அந்தரங்க நண்பனுகச் செய்து கொண்டான். துரியோதனனுடைய சந்தோஷத்தின் பொருட்டு அவன் சொல்லும் ஒவ்வொன்றையும் கர்ணன் தடையில்லாமல் செய்துவருவான். பாரத யுத்தம் ஆரம்பமாகும்போது அவனுக்குப் பாண்டவர் ஐவரும் தன் சகோதரர் என்று தெரிந்தது. அவன் தாய் குந்தி தேவி அவனைப் பாண்டவர்களுடன் சேர்ந்துகொள்ளும்படி பலவாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். கர்ணன் அது நியாயவிரோதம என்று மறுத்து அவர்களுடன் சேரவில்லை. தனது நண்பன் துரியோதனன் பக்கத்திலேயே யிருந்து அவன் பொருட்டுப் பாண்டவர்களோடு சண்டையும் செய்து அர்ச்சுனனுலேயே இறந்து போனன். அவனைப்போல நாமும் ஒருவரோடு சிநேகம் செய்த பின்பு அவரை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டும். **மகாபாரதம்.**

கூடிப் பிரியேல்.

**கூடி - (ஒருவரோடு) சிநேகம் செய்து, பிரியேல்-(நீ அவரை விட்டு) நீங்காதே.**

38. முன்னாளில் வடமதுரையில் உக்கிரசேன மகாராஜா என்று ஒரு உயர்ந்த அரசர் இருந்தார். அவர் புத்திரனுக்குக் கம்சன் என்று பெயர். அவன் தன் சகோதரியின் வயிற்றில் பிறந்த கிருஷ்ணன் என்பவனைப் பகைத்து, அவனைக் கொல்வதற்குப் பலவிதமான கெடுதிகளைச் செய்தும், தனது நண்பர்களைக்கொண்டு செய்வித்தும் வந்தான். ஆனால், அவற்றில் ஒன்றாவது பயன்படவில்லை. எல்லாவற்றையும் கிருஷ்ணன் உபாயத்தினாலும் தனது பராக்கிரமத்தினாலும் எளிதில் நீக்கிக்கொண்டு விட்டான். பிற்பாடு கம்சன் தன் கொடுந்தொழிலின் பலனாக அக்கிருஷ்ணனால் மற்றொரு சமயத்தில் மரணமடைந்து போனான். அவனைப்போல நாமும் பிறரைக் கெடுப்பதற்கு நினைக்கலாகாது. பாகவதம்.

கெடுப்ப தொழி.

**கெடுப்பது-(பிறருக்குக்) கெடுதிசெய்வதை, ஒழி (நீ) விட்டுவிடு.**

39. பரிக்ஷித்து என்னும் அரசன் பாண்டவரில் ஒருவனான அர்ச்சுனனுடைய பெயரன். அவன் ஒரு நாள் வேட்டையை விரும்பிக் காட்டுக்குச் சென்றான். அங்கே ஒரு முனிவர் நிஷ்டை செய்துகொண்டிருந்தார். அரசன் அவரிடம் சென்று 'முனிநாதா! வழி தவறிப் போயிற்று. எனக்கு அத்தினபுரத்துக்குச் செல்லும் வழியைத் தெரிவிக்கவேண்டும்' என்று பலதடவை வினவியும் அவர் ஒன்றும் விடை சொல்லவில்லை. அரசன் முனிவர் தன்னை அலக்ஷியம் பண்ணுகிறார் என்று நினைத்து, அங்கு இறந்துகிடந்த ஒரு பாம்பை எடுத்து அவர் கழுத்தில் மாலையாகப் போட்டு அப்பாற் சென்றுவிட்டான். அச்செய்தி அம்முனிவர் புத்திரருக்குத் தெரிந்தது. அவர்

அன்றைக்கு ஏழாவதுநாள் பாம்புகடித்து இறக்கும்படி அரசனுக்குச் சாபம் கொடுத்தார். அம்மன்னவன் அதனை முனிவர்களால் அறிந்து, அப்பொழுதே வியாசர் புத்திரரான சுகமுனிவரை அடைந்து அவரிடத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அவதாரப் பெருமைகளை விவரித்துக் கூறுகின்ற பாகவதத்தைப் பக்தியுடன் கேட்டுவந்தான். அதனால் அவனுக்கு உயர்ந்த ஞானம் உதயமாயிற்று. கடைசியில் அவன் கடவுள் திருவருளுக்கும் சொந்தமானான். அவனைப்போல ஒவ்வொருவரும் கடவுள் விஷயமாகச் சொல்லும் வார்த்தைகளைக் கேட்பதற்கு ஆசைப்பட வேண்டும். **பாகவதம்.**

கேள்வி முயல்.

**கேள்வி - (கல்வி யறிவுள்ளவர் சொல்லும் கடவுள் விஷயமான பொருள்களைக்) கேட்பதற்கு, முயல் – (நீ) முயற்சி செய்.**

40. 2, 23–வது கதைகளினால் பாண்டவர் தங்களுக்குச் சொந்தமான நாடுநகரங்களைச் சூதாட்டத்தில் இழந்து மனைவியோடு வனத்துக்குப் போனார்கள் என்பதைப் படித்திருக்கிறீர்கள். அவர்கள் காட்டில் கழிக்க வேண்டிய பன்னிரண்டு வருஷத்தையும் கஷ்டப்பட்டுக் கழித்து, ஒருவர்கண்ணுக்கும் தெரியாமல் நாட்டில் மறைந்திருக்கவேண்டிய ஒரு வருஷகாலத்தை மச்சதேசத்து அரசனான விராடமன்னவன் அரண்மனையில் இருந்து கழித்துவந்தார்கள். அவர்களில் பீமசேனன் விராடமன்னவனிடத்தில் சமையல் வேலை செய்துவந்தான். ஒரு சமயத்தில் இராஜசபைக்குவந்து வல்லமைபேசின ஒரு மல்லனை வெல்லமுடியாமல் அங்கிருந்த எல்லா மல்லர்களும் வருந்தி நின்றார்கள். அப்பொழுது பீமசேனன் அவனோடு சண்டைசெய்து வெற்றிகொண்டு தன் சாமர்த்தி

யத்தை வெளிப்படுத்தினான். அவனே மற்றொரு சமயத்தில் தனது பராக்கிரமத்தினால் விராட மன்னவனுடன் சண்டைசெய்த திரிகர்த்த மன்னவன் தேரைத் தூக்கி யெறிந்து விராட மன்னவனையும் காப்பாற்றியிருக்கிறான். அவனைப்போலச் சமயம் வாய்த்தபோது ஒவ்வொருவரும் கற்ற தொழிலை ஒளியாமல் வெளிப்படுத்த வேண்டும்.

**மகாபாரதம்.**

## கைவினை கரவேல்.

**கைவினை - (நீ கற்றுக்கொண்ட) கைத்தொழில்களை; கரவேல்- (சமயத்தில்) ஒளியாதே.**

41. தேவர்களில் வசுக்கள் என்று ஒருவகுப்பார் இருக்கிறார்கள். அவர்களின் தொகை எட்டுக்கோடி. அவர்களில் எட்டுப்பெயர் தலைமைபெற்றவர். ஒரு சமயத்தில் அந்த எண்மரும் வசிஷ்டமுனிவரிடத்தில் இருந்த காமதேநுவை ஒருவரும் அறியாமல் ஒருநாள் இரவில் வந்து திருடிக்கொண்டு போனார்கள். அச்செய்தி மறுநாள் முனிவருக்குத் தெரிந்தது. அவர் உடனே வசுக்களை அழைத்து 'நீங்கள் களவு செய்தபடியினால் உலகத்தில் மனிதர்களாகப் பிறவுங்கள்' என்று சாபம் கொடுத்தார். அவர்கள் அச்சாபத்தை நீக்கிக்கொள்ள முடியாமல் பின்னொருசமயத்தில் பூலோகத்தில் கங்காதேவியின் வயிற்றில் வந்து பிறந்து கஷ்டப்பட்டார்கள். ஆதலால், நாமும் பிறர்பொருள்களை அபகரிக்கலாகாது. **மகாபாரதம்.**

## கொள்ளை விரும்பேல்.

**கொள்ளை - (பிறர் பொருளைத்) திருடுவதற்கு, விரும்பேல் - (நீ) ஆசைப்படாதே.**

42. முதல் கதையில் இராமனைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். அவன் தனது இளம்பிராயத்தில் மந்தரை என்னும் வேலைக்காரியினுடைய கூன்முதுகின் மீது களிமண் உருண்டையை வேடிக்கையாகப் போட்டு விளையாடினான். அஃது அவளுக்கு மிகவும் அவமானமாக இருந்தது. அவள் அந்தச் செயலை மனத்தில் வைத்துச் சமயத்தை எதிர்பார்த்திருந்தாள். சிலவருஷங்களுக்குப் பின்னர் இராமனுக்கு இராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய முகூர்த்தம் நிச்சயித்திருந்தது. மந்தரை இராமன் சிற்றன்னையாகிய கைகேயியைக்கொண்டு அம்முகூர்த்தத்தைக் கலைத்து அவனையும் வனத்துக்குப் போக்கினாள். ஆதலால், நாம் பிறருக்கு அவமானம் உண்டாகும்படியான விளையாட்டுக்களைச் செய்யலாகாது. **இராமாயணம்.**

கோதாட் டொழி.

**கோது-குற்றம் (பொருந்திய), ஆட்டு-விளையாட்டுக்களை, ஒழி-(நீ) விட்டுவிடு.**

43. முன்னர் மதுரைப் பட்டணத்தை ஒரு பாண்டியராஜன் அரசாண்டு வந்தான். அவன் தன் நகரத்தில் காசியாத்திரை சென்றிருந்த ஓர் அந்தணன் மனைவியைக் காப்பாற்றுவதன் பொருட்டு அந்த அக்கிரகாரத்தில் உள்ள எல்லா அந்தணர் வீடுகளுக்கும் படியரிசி கொடுத்து அவர்கள் அனைவரையும் ஒருதன்மையாக ஆதரித்து வந்தான். சில மாதங்களுக்குப் பிற்பாடு காசிக்குச் சென்ற அந்தணன் திரும்பிவந்து மனைவியுடன் பேசிக்கொண்டிருந்தான். இரவில் மாறுவேஷம் பூண்டுவந்த அரசன் அவனை யாரோ அயலான் என்று நினைத்துத் தெருக்கதவைத் தட்டினான். அந்தணன் 'யார்?' என்று அதட்டிக் கேட்டதனால், அவனைச் சொந்தக்காரன் என்று

தெரிந்துகொண்டு அவ்வந்தணனுக்குத் தன் மனைவியின் மீது சந்தேகம் உண்டாகாதபடி அந்தத் தெருவில் உள்ள எல்லா வீட்டுச் சதவுகளையும் அப்படியே தட்டிக்கொண்டு அரண்மனை போய்ச் சேர்ந்தான். ஆயினும், அவன் மறு நாள் காலையில், ஆராய்ந்து பாராமல் கதவைத் தட்டி அந்தணனுக்கு அவன் மனைவியின் மீது சந்தேகத்தை உண்டு பண்ணின தனது வலக்கரத்தை வெட்டி யெறிந்துவிட்டான். அந்தச்செய்தி அந்தணர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் அரசன் செயலுக்கு ஆச்சரியப்பட்டு அப்பொழுதே பெரிய யாகஞ்செய்து பசும் பொன்னால் புதிய கை ஒன்று உண்டுபண்ணி அரசனுக்குப் பொருந்தப் பண்ணினார்கள். அன்றுமுதல் அவனுக்குப் பொற்கைப் பாண்டியன் என்று பெயர் உண்டாயிற்று. ஆதலால், நாமும் பிறருக்குப் பழியை உண்டாக்கும்படியான காரியங்களை மறந்தும் செய்யலாகாது. பழமொழி.

கெளவை அகற்று.

**கெளவை—(பிறருக்குப்) பழியை உண்டாக்கும் காரியங்களையும சொற்களையும், அகற்று - (நீசெய்யாமலும் சொல்லாமலும்) நீக்கிவிடு.**

44. முற்காலத்தில் மகத்துவம் பொருந்திய அகஸ்தியர், வசிஷ்டர் முதலான சப்தரிஷிகளும் தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன் கட்டளைக்கு அடங்கி நடந்து அவனுக்குப் பல்லக்கும் சுமந்து வந்தார்கள். அங்ஙனமே பூலோகத்தில் இருந்த புரூரவன் முதலான சக்ரவர்த்திகளுக்கும் முனிவர்கள் அடங்கி அவர்கள் கட்டளைப்படி நடந்திருக்கிறார்கள். தவத்தில் மிகுந்த முனிவர்களே அங்ஙனம் அடங்கியிருந்தபடியினால் நாமும் அரசன் கட்டளைக்கு அடங்கி நடக்கவேண்டும். இல்லாவிட்டால், தீமை உண்டாகும். **மகாபாரதம்**

சக்கர நெறிநில்.

**சக்கரம் — (அரசனுடைய ஆக்ஞைச்) சக்கரமானது, நெறி—(செல்லும்) வழியில், நில் - (நீ அடங்கி) நட.**

45. 5-வது கதையில் யயாதிமன்னவனைப்பற்றி ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். அவன் சந்திரவம்ச சக்ரவர்த்தி. பிரதிஷ்டானம் என்ற பட்டணம் அவனுக்கு ராஜதானியாக இருந்தது. அம்மன்னவன் நல்வினைப் பயனால் தெய்வலோகம் சென்று அங்கு நெடுங்காலம் வரையில் வசித்து வந்தான். ஒருசமயத்தில் அவன் இந்திரன் முன்னர்த் தன்னை அகங்கரித்துப் புகழ்ந்துகொண்ட குற்றத்தினால் புண்ணியம் குறைந்து நிலத்தில் தள்ளப்பட்டான். அப்பொழுது அவன் இந்திரனைநோக்கி, 'மேன்மை பொருந்தியவனே! கருணைகொண்டு, என்னை நல்லவர்களுக்கு நடுவில் விழும்படி செய். நான் வேண்டும் வரம் அந்த ஒன்றே யொன்றுதான்' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்; இந்திரன் 'அவ்வண்ணமே யாகட்டும்' என்று அவனுக்கு அந்த வரத்தைக் கொடுத்தான். பின்னர் யயாதி மன்னவன் அஷ்டகன் முதலான நான்கு முனிவர்களுக்குமு நடுவில் வந்து விழுந்தான். அம்முனிவர் தங்கள் ஆச்சிரமத்தில் அவனுக்கு இடங்கொடுத்து ஆதரித்தார்கள். மன்னவன் அவர்களைப் பிரியாமல் இருந்து அவர்கள் தன்னைக் கேட்ட தரும சந்தேகங்களை யெல்லாம் தீர்த்துக்கொண் டிருந்தான். சிலகாலத்துக்குப் பிற்பாடு, இந்திரன் அந்த நான்கு முனிவர்களையும் தன் உலகத்துக்கு அழைத்து வரும்படி விமானத்தை அனுப்பினன். அந்நால்வரும் 'யயாதிமன்னவன் இல்லாமல் நாங்கள் மாத்திரம் சுவர்க்

கத்துக்கு வரமாட்டோம்' என்று மறுத்து விட்டார்கள். இந்திரன் அவர்களுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணும்பொருட்டு யயாதி மன்னவனையும் அவர்களுடன் சுவர்க்கத்துக்கு அழைப்பித்துக் கொண்டான். ஆதலால், யயாதி மன்னவனைப்போல நாமும் பெரியவர்களின் கூட்டத்தில் இருந்தால் நன்மைபெறலாம். **மகாபாரதம்.**

சான்றோர் இனத்திரு.

***சான்றோர்-(கல்வி அறிவு ஒழுக்கங்களில் நிறைந்த) பெரியவர்களுடைய, இனத்து - கூட்டத்தில், இரு - (நீ சேர்ந்து) இரு.***

46. முருகன் என்ற சிறுவன் திருப்பத்தூரில் மாடு மேய்த்துக்கொண்டிருந்தான். அவன் ஒருநாள் பக்கத்தில் உள்ளவர்களை வேடிக்கை செய்யவேண்டும் என்று நினைத்து 'ஐயோ! புலி வருகிறது! புலி வருகிறது!!' என்று பொய்க்கூச்சல் போட்டான். அயலில் இருந்தவர்கள் அதனை உண்மையென்று நினைத்துப் பரபரப்போடு ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தார்கள். அங்கே புலியைக் காணவில்லை. 'சிறுவன் தங்களைப் பொய் சொல்லி ஏமாற்றினான்' என்று அவனைத் திட்டிக்கொண்டு திரும்பிப் போய்விட்டார்கள். மற்றொருநாள் உண்மையாகவே புலி வந்துவிட்டது. அச்சிறுவன் 'ஐயோ! புலி!! புலி!!' என்று பலதடவை உரத்துக் கூவினான். சிறுவன் முன்போலவே வேடிக்கை செய்கிறான் என்று ஒருவரும் வரவில்லை. புலிவந்து சிறுவனைத் தூக்கிக் கொண்டு போய்விட்டது. அச்சிறுவனைப் போல நாமும் வேடிக்கைக்காகவும் பொய் சொல்லக்கூடாது. **கதாமஞ்சரி.**

சித்திரம் பேசேல்.

***சித்திரம்-(மெய்போலத் தோன்றும்) வேடிக்கைவார்த்தைகளை, பேசேல் - (நீ) பேசாதே.***

47. 8-வது கதையில் அரிச்சந்திர மன்னவனைப் பற்றித் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். அவன் தனது நாடுநகரம் முதலிய எல்லாவற்றையும் கவுசிக முனிவருக்குத் தானம் கொடுத்துவிட்டுக் காசிப்பட்டணம் போனான். அங்கே அக்கௌசிகர் கடனுக்காக மனைவியையும் மகனையும் அந்தப் பட்டணத்தில் இருந்த காளகண்டன் என்னும் அந்தணனுக்கு அடிமையாக்கித், தானும் வீரபாகு என்ற ஒரு பறையனுக்கு அடிமையாகிச் சுடுகாடு காத்துவந்தான். அப்படிப்பட்ட கஷ்ட சமயத்திலும் கூட அவன் கவுசிக முனிவர் தன்னைக் கேட்டுக்கொண்டபடி பொய் சொல்ல விரும்பவில்லை. புகழுக்குக் காரணமான உண்மை பேசுதலையே உறுதியாகக்கொண்டு உயர்ந்த கீர்த்தியை அடைந்தான். அவனைப்போல நாமும் புகழுக்குக் காரணமான மேன்மைக் குணத்தை மறவாமல் இருக்கவேண்டும். **மகாபாரதம்.**

சீர்மை மறவேல்.

**சீர்மை - (புகழுக்குக் காரணமான) மேன்மைக் குணத்தை, மறவேல் - (நீ) மறந்துவிடாதே.**

48. சேதிப் பட்டணத்தில் சிசுபாலன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் தனது மாமன் மகனை கிருஷ்ணன்மீது பொறாமைகொண்டு அவனைப் பலவிடங்களிலும் பலவாறு தூஷித்துப் பேசிவந்தான். எப்படிப்பட்ட பெரிய சபையாக இருந்தபோதிலும், அவன் அவரைத் தூஷியாமல் இருப்பதில்லை. ஒரு சமயத்தில் யுதிஷ்டிர சக்ரவர்த்தி இந்திர ப்ரஸ்தத்தில் இராஜசூயம் என்னும் பெரிய யாகத்தைச் செய்தார். உலகத்தில் இருந்த எல்லா அரசர்களும் எல்லாப் பெரியவர்களும் அந்த யாகத்துக்கு வந்திருந்தார்கள். யாகசபையில் சிசுபாலன் தன் வழக்கப்

MAHAMAHOPADHYAYA

படி கிருஷ்ணனைத் 'துஷ்டன் என்றும், திருடன் என்றும், அயோக்கியன் என்றும்' தூஷிக்கத் தொடங்கினான் உடனே கிருஷ்ணன் கோபங்கொண்டு எல்லாருக்கும் எதிரில் அவனைக் கொன்றுவிட்டார். ஆதலால், நாமும் பிறருக்கு வருத்தம் தரும்படியான வார்த்தைகளைச் சொல்லக் கூடாது. **மகாபாரதம்.**

சுளிக்கச் சொல்லேல்.

**சுளிக்க - (கேட்போர் முகம் சுளித்து) வெறுக்கும்படி, சொல்லேல் - (நீ ஒன்றும்) சொல்லாதே.**

49. முன்னாளில் நிடதநாட்டுக்கு நளன் என்ற அரசன் தலைவனாக இருந்தான். அவன் ஒருநாள் பொழுது போக்குக்காகப் புஷ்கரன் என்னும் ஒரு சிறிய அரசனுடன் சூது ஆடத் தொடங்கினான். அவ்வாட்டத்தில் அவனுக்குச் சொந்தமான அரசையும் அதிகாரத்தையும் கூடப் பந்தயம் வைத்து ஆடி அவ்வொரு நாளிலேயே எல்லாவற்றையும் இழந்து விட்டான். பின்பு மனைவியும் அவனும் வயிறு வளர்ப்பதன் பொருட்டு வேற்றுத்தேசம் சென்றார்கள். அவன் தரித்திர மிகுதியினால் நடுக்காட்டில் மனைவியை விட்டுப் பிரிந்து ருதுபர்ணன் என்ற வேறொரு அரசனுக்குச் சமையல் வேலை செய்து ஜீவனம் பண்ணி வந்தான். அவன் மனைவி தமயந்தி அந்தக் காட்டில் அலைந்து திரிந்து முடிவில் சேதிநாட்டை அடைந்து அந்நாட்டு அரசன் மகளுக்குத் தாதியாக இருந்து பலவிதமான கஷ்டங்களை அநுபவித்தாள். ஆதலால், நாமும் நளனைப்போலச் சூதாடக்கூடாது. **நைடதம்.**

சூது விரும்பேல்.

**சூது – சூதாட்டத்தை, விரும்பேல் (நீ) - விரும்பாதே.**

50. அந்தணகுலத்தில் சாணக்கியர் என்று ஒருவர் இருந்தார். அவர் இராஜ தந்திரத்தில் வல்லவர். பாடலி புரத்தைப் பரிபாலித்துவந்த நவநந்தனர் என்பவர்கள் ஒருசமயத்தில் அவரை எதிரில் இகழ்ந்து பேசினார்கள். சாணக்கியர் அந்தப் பகையை மனத்தில் வைத்திருந்து பருவதராஜனைக் கொண்டு அவர்களை அடியோடு தொலைத்துச் சந்திரகுப்தன் என்றவனுக்கு அவ்வரசைச் சொந்தமாக்கினார். இராக்ஷஸன் என்ற முதல் மந்திரிக்கு அது சரிப்படவில்லை. அவன் நந்தனவம்சத்தில் மிகவும் அன்புள்ளவன். அம்மந்திரி சந்திரகுப்தன் பவனி வருகையில், கோபுரத்தின் மீது ஒருவனை உட்காருவித்து அவன் தலையில் விழும்வண்ணம் ஒரு பெருங்கல்லைப் புரட்டியும், அவன் புகுந்த அறைக்கு நெருப்பிடுவித்தும், இன்னும் இதுபோன்ற பலவிதமான ஆபத்துக்களை உண்டுபண்ணி வந்தான். சாணக்கியர் தமக்குச் சொந்தமான எல்லா வேலைகளையும் விட்டு அப்பட்டணத்தில் வருஷக்கணக்காக இருந்துகொண்டு இராக்ஷஸன் செய்யும் ஒவ்வொரு சூழ்ச்சியையும் அறிந்து தடுத்துச் சந்திரகுப்தனுக்கு எவ்விதத்திலும் ஆபத்து வரவொட்டாமற் காத்து அவனைச் சிங்காதனத்தில் நிலைக்கப்பண்ணினார். அவரைப்போல ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்ட காரியத்தைச் செம்மையாகச் செய்து முடிக்கவேண்டும். **முத்திராராக்ஷஸம்.**

செய்வன திருந்தச் செய்.

**செய்வன - செய்யவேண்டிய காரியங்களை, திருந்த - செம்மையாக, செய் - (நீ) செய்.**

51. 45-வது கதையைப் படித்துக்கொள்க.

சேரிடம் அறிந்துசேர்.

**சேர் இடம்-சேரத்தகும் இடத்தை, அறிந்து - தெரிந்துகொண்டு, சேர் - (நீ) சேர்ந்திரு.**

52. துரியோதனனுக்கும் பாண்டவருக்கும் ஆதி முதல் பகைபெருகி வந்ததென்பது மேலே படித்த கதைகளினால் தெரிந்திருக்கலாம். துரியோதனன் தந்தை அப்பொழுது சிங்காசனத்தில் இருந்துவந்த படியினால் அவனுக்குச் செல்வாக்கு அதிகமாயிற்று. அதனால் அவன் கருவம்கொண்டு பாண்டவரில் தனக்கு மிகவும் பகையான பீமனைக் கொல்லும் பொருட்டு அவன் சாப்பாட்டில் விஷத்தைக் கலந்தான். அவன் கங்கையாற்றில் விளையாடும் இடத்தில் நீரில் கழுக்களை நாட்டினான். அவன் தூக்கத்தில் பாம்புகளைக் கடிக்கவிட்டான். ஐவரும் தூங்கும்போது வீட்டில் நெருப்பிட்டுக் கொளுத்தினான். சூதாட்டத்தில் அவர்கள் இராஜ்யத்தை அபகரித்துக்கொண்டான். அவர்கள் மனைவியான பாஞ்சாலியை இராஜசபையில் அழைத்து வந்து மானபங்கம் செய்தான். அவர்கள் இறப்பதற்கு மரணயாகம் செய்வித்தான். இவையன்றி இன்னும் பல வகையான அக்கிரமங்களையும் அப்பொழு தப்பொழுது அவன் அவர்களுக்குச் செய்துவந்தான். இக்காரணங்களினால் நாட்டில் உள்ள பலரும் அவனைச் 'சீ! துஷ்டன்! துஷ்டன்!!' என்று வெறுக்கத் தொடங்கினார்கள். துரியோதனன் சிறிதும் நல்லவனாகாமல் அப்படியே இறந்து போனான். அவனைப்போல நாமும் 'சீ! இவன் துஷ்டன்!' என்று வெறுக்கும்படி உலகத்தில் திரியலாகாது.

மகாபாரதம்.

சை யெனத் திரியேல்.

சையென - (பெரியோர் உன்னைச்) சீ என்று (வெறுக்கும்படி), திரியேல் - (நீ துஷ்டனாகத்) திரியாதே.

53. வனத்தில் அக்னிவேசியர் என்று ஒரு ரிஷி இருந்தார். அவரிடத்தில் துரோணன், துருபதன் என்று

இரண்டு மாணாக்கர் படித்துவந்தார்கள். துரோணன் அந்தணகுலம்; துருபதன் க்ஷத்திரியகுலம்; துருபதனுக்கு மறதி அதிகம்; துரோணனே சுறுசுறுப்புள்ளவன்; துருபதன் துரோணனிடத்தில் தான்மறந்துபோன வில்வித்தை கலைகளையெல்லாம் அடிக்கடி கற்றுக்கொண்டுவருவான். சில வருஷம் கழித்து அவ்விருவரும் குருவிடம் விடை பெற்றுக்கொண்டு வேறுவேறு பிரிந்துபோகத் தொடங்கினார்கள். அப்பொழுது துருபதன் துரோணனை நோக்கி, 'நான் மறந்துபோன எல்லாவற்றையும் நீ எனக்குப் பொறுமையுடன் கற்பித்திருக்கிறாய்; நான் அவ்வுதவியை மறந்துபோகவில்லை; எனக்குச் சிங்காதனம் சொந்தமாகட்டும்; நன்றி யறிதலின்பொருட்டு உனக்கு அந்த அரசில் பாதியைப் பங்கிட்டுத் தருகிறேன்' என்று வாக்குத்தத்தம் செய்து விடை பெற்றுக்கொண்டு போனான். சில வருஷங்களுக்குப் பின்பு துருபதனுக்கு அரசு கிடைத்தது. அவன் சிங்காதனத்தில் இருக்கும்போது ஒருநாள் துரோணன் அவன் சபைக்குச்சென்று 'அரசனே! நான் உனது பழைய நண்பன்; ஒரு கறவைப் பசுவைவிரும்பி உன்னிடம் வந்திருக்கிறேன்' என்றுசொன்னான். அதனைக் கொடுக்க மனம்வராமல் அரசன் அனைவருக்கும் எதிரில் அவனை 'பேராசைக்காரன்' என்று அவமதித்துப் பரிகாசம் பண்ணினான். முன்பு அவனுக்குச் சொன்னவசனத்தை கொஞ்சமும்கவனிக்கவில்லை. உடனே துரோணன் கோபம் கொண்டு 'துஷ்டவரசனே! நீ என்னை அவமதித்ததற்குப் பதில் செய்கிறேன்! பார்' என்று சபதம்செய்து, மற்றொரு சமயத்தில் பாண்டவரில் ஒருவனான அர்ச்சுனனைக் கொண்டு சண்டையில் அவனைத் தேர்க்காலில் கட்டிவரச் செய்து மானபங்கம் பண்ணினான். ஆதலால், நாமும்

பாஞ்சாலனைப்போலச் சொன்னசொல்லை நிறைவேற்று வதற்குச் சோர்வடையலாகாது. **மகாபாரதம்.**

சொற் சோர்வு படேல்.

***சொல்-(சொன்ன) சொல்லை (நிறைவேற்றுவதற்கு), சோர்வு படேல் - (நீ) சோர்வடையாதே***

---

54. 31-வது கதையில் கும்பகர்ணனைப் பற்றி நீங்கள் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். அவன் இலங்கைப் பட்டினத்தில் இராவணனுக்கும இராமருக்கும் நடந்த சண்டையில் மிகவும் கஷ்டப்பட்டு யுத்தம்செய்து சுக்கிரீவன் என்ற குரங்கரசனை உயிருடன் பிடித்துக்கொண்டு பட்டினம்போனான். நடு வழியில் 'கையில் அகப்பட்டவன் எங்குச் செல்லப்போகிறான்' என்று நினைத்துச் சற்றுச் சோம்பலாகச் செல்லத் தொடங்கினான். சுக்கிரீவன் அவன் அஜாக்கிரதையை அறிந்து தருணம் பார்த்து அவனுடைய மூக்கையும் காதையும் கடித்து எடுத்துக்கொண்டு இராமரிடத்துக்கு வந்து சேர்ந்துவிட்டான். கும்பகர்ணன் ரணகளத்தில் பகைவனை உயிருடன் பிடித்து வந்தும் பயனடையவில்லை. சோம்பலினால் அவமானத்தையும் ஆபத்தையுமே அடைந்தான். ஆதலால், அவனைப்போல நாமும சோம்பல் கொண்டு திரியலாகாது. **இராமாயணம்.**

சோம்பித் திரியேல்.

***சோம்பி - (காரியத்தில்) சோம்பல்கொண்டு, திரியேல் - (நீ) திரியாதே.***

---

55. 2-வது கதையில் துரியோதனன், பாண்டவர் மனைவியான பாஞ்சாலியை மானபங்கம் பண்ணச் சபை

யில அழைப்பித்தான் என்று படித்திருக்கிறீர்கள். அந்தப் பாஞ்சாலி இராஜசபைக்கு வந்து அங்குள்ள பெரியவர்களைத் தனக்கு நியாயம் சொல்லும்படி கேட்டாள். ஒருவராவது வாயைத் திறக்கவில்லை. அத்தனை பெயரும் மௌனமாக இருந்துவிட்டார்கள். அப்பொழுது துரியோதனனுக்குக் கடைசி சகோதரனான விகர்ணன் என்பவன் எழுந்து சபையில் உள்ள அனைவரும் ஒப்புக்கொள்ளும்படி அவளுக்கு நியாயம் கூறினான். எல்லாரும் 'நன்றாய்ச் சொன்னான்; நன்றாய்ச் சொன்னான்' என்று அவனைக் கொண்டாடினார்கள். ஆதலால், நாமும் அவனைப் போல யோக்கியன் என்று பெயரெடுக்கவேண்டும்.

**மகாபாரதம்.**

தக்கோன் எனத்திரி.

**தக்கோன் என - (பெரியவர் உன்னை) யோக்கியன் என்று சொல்லும்படி, திரி - (நீ) நட.**

56. 30-வது கதையில் பதினேழாவது நாள் பாரத யுத்தத்தில் அர்ச்சுனன் விட்ட அம்புகளால் கர்ணன் சோர்ந்து தேர்த்தட்டில் விழுந்து விட்டானென்றும், அப்பொழுது அவன் செய்த தருமமே அவனைக் காப்பாற்றியதென்றும் படித்திருக்கிறீர்கள். அந்த யுத்தத்தில் அர்ச்சுனனுக்குத் தேர்ப்பாகனாக இருந்தவர் கண்ணபிரான். அவர் அர்ச்சுனனுக்கு நன்மை செய்யும் பொருட்டுக் கர்ணனிடம் அந்தண வேஷத்தோடு சென்று, அவன் அதுவரையிலும் செய்திருந்த நல்வினைகளை யெல்லாம் தானமாகக் கேட்டார். கர்ணன் சந்தோஷமடைந்து தன்னுயிர்க்குத் துணையாக இருந்த அந்நல்வினைகளைக் கொடுத்து அழியாத கீர்த்தியை அடைந்தான். அவனைப் போலவே நாமும் பிறருக்குத் தானம் செய்ய ஆசைப்படவேண்டும்.

**மகாபாரதம்.**

தானமது விரும்பு.

***தானம் அது*** - (நல்லவர்களுக்குத்), ***தானஞ் செய்வதற்கு, விரும்பு*** – (நீ) ஆசைப்படு.

57. 24-வது கதை இரணியன் என்று ஒரு அசுரன் இருந்ததாக உங்களுக்குத் தெரிவித்திருக்கிறது. அவன் சகோதரனை ஸ்ரீ மகாவிஷ்ணு வராக வடிவம் கொண்டு கொன்றுவிட்டபடியினால் அவன் முதலிலிருந்து அம்மகா விஷ்ணுவைப் பகைத்துக்கொண்டு வந்தான். அவன் ஆளுகையில் விஷ்ணுவின் பெயரை எவரும் உச்சரிக்கலாகாது. தவறிச் சொன்னவர் எவராயினும் தண்டிக்கப்படுவார். சில வருஷங்களுக்குப் பின்னர் அவனுக்குப் பிரஹ்லாதன் என்று ஒரு புத்திரன் பிறந்தான். அவன் ஸ்ரீ மகா விஷ்ணுவினிடத்தில் மிகவும் அன்புள்ளவன். தன் விரோதியை வணங்கி வருகிறான் என்று இரணியன் அவனுக்குப் பலவிதமான இம்சைகளை உண்டு பண்ணினான். பிரஹ்லாதன் அவை எல்லாவற்றையும் அக்கடவுள் அருளினால் எளிதில் நீக்கிக்கொண்டு முடிவில் அவருக்கு முதன்மையான பக்தனும் ஆனான். ஆதலால், நாமும் பிரஹ்லாதனைப்போல விஷ்ணு பக்தனாக இருந்து அக்கடவுளுக்கு அடிமை செய்யவேண்டும். **பாகவதம்.**

திருமாலுக்கு அடிமை செய்.

***திருமாலுக்கு*** – மகா ***விஷ்ணுவுக்கு, அடிமை செய்*** – (நீ) தொண்டு செய்.

58. 52-வது கதை துரியோதனன் அக்கிரமங்களைச் சுருக்கித் தெரிவித்திருக்கிறது. அவன் ஒரு சமயத்தில் பாண்டவர்களைக் கெடுக்க விரும்பி வனத்துக்கு வந்தான். அங்கே ஒருவர் தவஞ் செய்து கொண்டிருந்தார். அவ

ருக்குக் காளமுனிவர் என்று பெயர். துரியோதனன் அவரைச் சரணமடைந்து தனது குறையை விண்ணப்பித்துக் கொண்டான். அம்முனிவர் 'ஒரு பெரிய யாகம் செய்து பாண்டவர்களை அடியோடு தொலைத்து விடுகிறேன்' என்று அவனுக்குத் தைரியம் சொன்னார். துரியோதனன் சந்தோஷம் கொண்டு அவர் விரும்பின வண்ணம் யாகத்துக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் கொடுத்தனுப்பினான். உடனே நல்ல முகூர்த்தத்தில் அந்த முனிவர் யாகத்தை ஆரம்பம் செய்து நடத்தி வந்தார். அதில் ஒரு பெரிய பூதம் உண்டாயிற்று. அது முனிவர் கட்டளை பெற்றுப் பாண்டவர் ஐவரையும் கொல்லப் புறப்பட்டுப் போயிற்று. அப்பொழுது பாண்டவரில் நால்வர், கிருஷ்ணன் செய்த ஒருவகைத் தந்திரத்தினால், இறந்தவர்போல ஒரு குளக்கரையில் விழுந்து கிடந்தார்கள். அந்தக் கொடிய பூதம் அவர்களைச் செத்தவர் என்று நினைத்துக் கோபத்தோடு திரும்பி வந்து, தன்னை உண்டு பண்ணி யனுப்பின முனிவரையே கொன்று மறைந்தது. ஆதலால், நாமும் பிறரைக் கெடுக்கும்படியான பாவகாரியங்களைப் பண்ணலாகாது. **மகாபாரதம்.**

தீவினை அகற்று.

**தீவினை**-பாவச் செயல்களை, **அகற்று**-(நீ) நீக்கு.

59. 39-வது கதையில் பரிக்ஷித்து மன்னவன் தனக்கு அகால மரணம் உண்டாகப் போகின்றது என்பதை முனிவரால் தெரிந்துகொண்டான் என்று படித்திருக்கிறீர்கள். அவன் 'வேலை இல்லாமலிருந்தால், பெரிய விசாரமாக இருக்கும்; அஃது இன்னும் துக்கத்தை உண்டுபண்ணும்; இருக்கும் வரையில் மனத்தைச் சந்

சந்தோஷமாக வைத்துக்கொள்ளவேண்டும்' என்று எண்ணிச் சுகமுனிவரை அடைந்து அவரிடத்தில் பாகவதத்தைக் கேட்டு மரணவிசாரம் இல்லாமலே பரமசந்தோஷமாக உயிர்துறந்தான். மரணத்தை அறிந்தும் அவன் விசாரப்படவில்லை. அவனைப்போல நாமும் மனத் துன்பத்துக்கு இடம் கொடுக்காமல் இருக்கவேண்டும்.

**பாகவதம்.**

துன்பத்துக் கிடங் கொடேல்.

**துன்பத்துக்கு** - (மன) வருத்தத்துக்கு **இடம் கொடேல்** – (நீ) **இடம் கொடாதே.**

60. காசிப்பட்டணத்தில் ஒரு பிராமண ஸ்திரீ கீரிப்பிள்ளை யொன்று வளர்த்து வந்தாள். ஒருநாள் அவள் தன்னுடைய இளங்குழந்தைக்கு அந்தக் கீரியைக் காவல் வைத்து விட்டு நீராடப்போனாள். அப்பொழுது ஒரு கரும்பாம்பு அந்தக் குழந்தையைக் கடிக்கவந்தது. கீரிப்பிள்ளை உடனே அதனோடு சண்டை செய்து அந்தப் பாம்பை இரண்டு துண்டமாக்கிக் கொன்று வாயிற்படியில் வந்து நின்றது. அவள் நீராடித் திரும்பிவரும்போது இரத்தத்தோடு நிற்கும் கீரிப்பிள்ளையைக் கண்டு, 'அது தன் குழந்தையைத்தான் கடித்துக் கொன்றுவிட்டது' என்று எண்ணிக்கொண்டு தான் சுமந்து வந்த தண்ணீர்க்குடத்தை அதன்மேல் போட்டுக் கொன்று உள்ளே நுழைந்தாள். அங்குத் தொட்டிலில் குழந்தை விளையாடிக்கொண்டிருக்கவும் பாம்பு இறந்து கிடக்கவும் கண்டு, 'ஐயோ! ஆராய்ந்து பாராமல் கீரிப்பிள்ளையை அநியாயமாகக் கொன்று விட்டோமே' என்று வருந்தித் தானும் இறந்துபோனாள். ஆதலால், ஆராய்ந்து பாராமல் ஒரு காரியத்தையும் செய்யலாகாது.

**பஞ்சதந்திரம்.**

### தூக்கி வினைசெய்.

**தூக்கி-ஆராய்ந்து, வினை-(ஒரு) தொழிலை, செய் - (நீ) செய்.**

61. 57-வது கதையினால் இரணியன் ஸ்ரீ மகா விஷ்ணுவின் மீது மிகவும் பகை கொண்டிருந்தான் என்று வெளியாகின்றது. அவன் அரசாட்சியில் கடவுளின் பெயரை உச்சரிக்கின்றவர்கள் மரண தண்டனையை அடைந்து வந்தார்கள். தெய்வத்தைக் குறித்துச் செய்யப்படும் ஜபம், தபம், ஹோமம் முதலிய எல்லாவற்றையும் தன்னைக் குறித்தே செய்யும்படி அவன் கட்டளையிட்டிருந்தான். பிற்பாடு அவன் அத்தெய்வ தூஷணையினால் அனைவராலும் வெறுக்கப்பட்டு முடிவில் ஸ்ரீமகாவிஷ்ணுவின் நரசிங்காவதாரத்தினால் மரணமடைந்து போனான். ஆதலால், நாமும் தெய்வத்தைத் தூஷிக்கலாகாது. **பாகவதம்.**

### தெய்வம் இகழேல்.

**தெய்வம்-கடவுளை, இகழேல்-(நீ) இகழ்ச்சி பண்ணாதே.**

62. டெல்லிப் பட்டணத்தில் மயிலாசனத்திலிருந்து அரசு செலுத்தி வந்த அரசர்களில் ஔரங்கஜீப் என்பவர் ஒருவர். அவர் ஆடம்பரம் அற்றவர். நல்லொழுக்கம் உள்ளவர். ஆனால், மதவிஷயத்தில் மாத்திரம் அவருக்குப் பிடிவாதம் உண்டு. அவர் வட இந்தியா முழுவதையும் துருக்கமதம் ஆக்குவதற்குப் பலவிதத்திலும் பிரயத்தனப்பட்டு வந்தார். அம்மதத்தில் சேர மனமில்லாதவர்களுக்குத் தனியான வரிகள் விதித்தார். இன்னும் பல சில்லரைத் தொந்தரைகளாலும் அவர்களை உபத்திரவித்தார். ஜனங்கள் அவற்றைப் பொறுக்கமுடியாமல் மூலைக்கு மூலை கலகம் செய்யத் தொடங்கினார்கள். மதத்

தில் உள்ள அபமானத்தினால் அவ்வரசருக்கு அவர்கள் கூக்குரல் ஒன்றும் செவியில் ஏறவில்லை. முடிவில் அந்த ஒரு குற்றத்தினாலேயே அவர் அரசாட்சி அமைதியில் லாமல் அடியோடு அழிந்துபோய் விட்டது. ஆதலால், தேசத்தில் உள்ளவர்களின் கொள்கைக்கு விரோதமாக நாம் நடக்கலாகாது. **இந்துதேச சரித்திரம்.**

## தேசத்தோடு ஒத்துவாழ்.

***தேசத்தோடு-(நீ வாசம் செய்யும்) தேசத்தில் உள்ளவர்களுடன், ஒத்து-(பகையில்லாமல்) கூடியிருந்து, வாழ்-(நீ) வாழு.***

63. முற்காலத்தில் சுந்தன் உபசுந்தன் என்று இரண்டு அசுர சகோதரர் இருந்தார்கள். அவர்கள் ஒற்றுமையில் மிகுந்தவர்கள். வரத்திலும் பலத்திலும் உயர்ந்தவர்கள். ஒருவராலும் வெல்ல முடியாதவர்கள். ஒரு சமயத்தில் அவ்விருவரும் அழகில் மிகுந்த திலோத்தமை என்ற தெய்வப் பெண்ணை மணம் செய்துகொள்ள ஆசைப்பட்டார்கள். அந்தப்பெண் 'சூரர்களே! உங்களில் பராக்கிரமம் உள்ள ஒருவனை நான் மணந்துகொள்ளுகிறேன்' என்று ஆசை வார்த்தை சொன்னாள். அப் புத்தியற்ற சகோதரர்கள் தங்களில் பராக்கிரமம் உள்ளவனைத் தெரிந்துகொள்ளும் பொருட்டுத் தாங்களே ஒருவரோடு ஒருவர் சண்டைசெய்து இறந்துபோனார்கள். அவர்களைப்போல நாமும் பெண்களுடைய ஆசை வார்த்தைகளைக் கேட்கலாகாது. **மகாபாரதம்.**

## தையல்சொல் கேளேல்.

***தையல் - பெண்களுடைய, சொல் - (ஆசை) வார்த்தைகளை, கேளேல் – (நீ) கேட்டு (நடவாதே).***

64. 15-வது கதை உங்களுக்குக் கிருஷ்ணனைப் பற்றித் தெரிவித்திருக்கிறது. அவன் தன்னுடைய இளம் பிராயத்தில் குசேலன் என்ற அந்தணனோடு கல்வி கற்று வந்தான். கற்று முடிந்த பிற்பாடு, இருவரும் வேறு வேறு பிரிந்துபோனார்கள். நெடுநாள் கழித்துக் குசேலன் ஒரு சமயத்தில் கிருஷ்ணனைக் காணவேண்டும் என்று துவாரகைக்குச் சென்றான். அப்பொழுது குசேலன் தரித்திரத்தின் அவதாரமாகவும் கிருஷ்ணன் செல்வத்தின் அவதாரமாகவும் இருந்தார்கள். காவற்காரர் குசேலன் வேஷத்தைக்கண்டு பரிகாசம் பண்ணிக் 'கிருஷ்ணன் அவனோடு பேசுவதும் கஷ்டமாக இருக்கும்' என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டனர். ஆனால், கிருஷ்ணன் அவர்கள் சொல்லியதுபோலக் குசேலனை அநாதரவு செய்யவில்லை. அவன் தன் பெருந்தன்மையைக் கொஞ்சமும் கவனியாமல் குசேலனைத் தழுவி உபசரித்து அவன் கொண்டுவந்த மிகவும் அற்பமான அவலையும் அன்போடு தின்று அவனுக்கு நிரம்பிய செல்வத்தைக் கொடுத்தனுப்பினான். அவனைப்போல நாமும் பழைய நட்பை மறக்கலாகாது. பாகவதம்.

தொன்மை மறவேல்.

தொன்மை — பழைமையாகிய (சிநேகத்தையும் உறவையும்,) மறவேல்-(நீ) மறந்து விடாதே.

65. 40-வது கதையில் பாண்டவர்களும் பாஞ்சாலியும் ஒருவருஷம் வரையில் விராடமன்னவன் அரண்மனையில் மறைந்திருந்தார்கள் என்று படித்திருக்கிறீர்கள். அப்பொழுது துரியோதனன் விராட மன்னவனது பசுக்கூட்டங்களை அபகரித்துக் கொண்டு அவனோடு வலுவில் சண்டையிடத் தொடங்கினான். அர்ச்சுனன் அம்மன்ன

வனுக்கு உதவி செய்வதன் பொருட்டு உத்தரகுமாரன் என்பவனைச் சாரதியாக அமர்த்திக்கொண்டு தான் பூண்டிருந்த பேடி வடிவத்துடன் துரியோதனன் படைகளை எதிர்த்துப் பசுக்களை மீட்டு வெற்றியடைந்தான். அப்பொழுது துரியோதனன் 'தவணை முடிவதற்குள் அர்ச்சுனன் வெளிப்பட்டுவிட்டான்; அவன் மறுபடியும் சகோதரர்களோடு பன்னிரண்டு வருஷம் வரையில் வனத்தில் வாசம் செய்யச்செல்லவேண்டும்' என்று பாட்டனரான பீஷ்மரிடத்தில் வழக்குச் செய்துகொண்டான். அவர் 'துரியோதன! நீசொல்வது நியாயமன்று; அவர்கள் தவணை நேற்றோடு தொலைந்து போயிற்று; அர்ச்சுனன் சரியான காலத்தில் தான் வெளிப்பட்டிருக்கிறான்; அவனை இனி ஆரணியத்துக்கு அனுப்பமுடியாது' என்று நாட்களைக் கணக்கிட்டுச் சொல்லி, அவன் வழக்கைத தள்ளிவிட்டார். ஆதலால் ஒருவரும் தோல்வியடையும்படியான வழக்கைத் தொடரலாகாது. **மகாபாரதம்.**

தோற்பன தொடரேல்.

***தோற்பன* - தோல்வி (அடையக்கூடிய) காரியங்களில், *தொடரேல்* - (நீ வழக்குச்) செய்யாதே.**

66. நெடுங்காலத்துக்கு முன்னர்ச் சூரியகுலத்தில் பகீரதன் என்று ஒரு மன்னவன் இருந்தான். அவன் பாட்டன்மார்களான சகரர்கள் கபிலமுனிவர் சாபத்தினால் பாதாளத்தில் இறந்துபோய் விட்டார்கள். பகீரதன் அவர்களுக்கு நற்கதியை உண்டுபண்ணும் பொருட்டு வனத்துக்குச் சென்று ஆயிரக்கணக்கான வருஷங்கள் தவம்செய்து ஆகாயத்தில் இருந்த தெய்வ கங்கையை, நிலத்துக்குக் கொண்டு வந்தான். அவன் வருத்தத்தை ஒருவரும் அடைந்திருக்க மாட்டார்கள். அவன் தனது

கஷ்டத்தைக் கொஞ்சமும் கவனியாமல் உலகம் உள்ள வரையில் உயிர்களுக்கு உயர்ந்த நன்மையை உண்டுபண்ணு கின்ற அந்தப் பெரிய காரியத்தை அரிதில் நிறைவேற்றிப் பாட்டன்மாருக்கும் புண்ணிய உலகத்தை அளித்தான். அவனைப்போல நாமும் வருத்தப்பட்டாவது நல்ல காரி யங்களைச் செய்யமுயலவேண்டும். **இராமாயணம்**

நன்மை கடைப்பிடி.

**நன்மை—நல்ல காரியங்களை, கடைப்பிடி—(நீ) உறுதியாகக்கொள்.**

67. 62-வது கதையைப் படித்துக்கொள்க.

நாடொப்பன செய்.

**நாடு-(உன்) நாட்டில் (உள்ள பலரும்), ஒப்பன-ஒத்துக்கொள் ளத் தகுந்த (காரியங்களை), செய்-(நீ) செய்.**

68. மொகலாயர்களின் ஆளுகையில் அக்பர் சக்ர வர்த்தியின் அரசாட்சி ஒப்பும் உயர்வும் அற்றது. அவர் காலத்தில் எல்லா ராஜபுத்திர அரசர்களும் மொகலாயர் களுக்குத் தங்கள் பெண்களைக்கொடுத்தும், அவர்கள் பெண் களைத் தாங்கள் மணம் செய்துகொண்டும் சிநேகமானார் கள். பிரதாபஸிங்கு என்ற அரசன் ஒருவன் மாத்திரம் அச்செய்கையை விரும்பாமல் வேறுபட்டிருந்தான். அக் பர் சக்ரவர்த்தி, அவன் தமது சம்மதப்படி நடக்கவில்லை என்று கோபம்கொண்டு அவன் இராஜ்யத்தை அபகரித்து, அவனையும் அவன் குடும்பத்தையும் வனத்தில் ஓட்டினார். பிரதாபஸிங்கு வனத்தில் நல்ல சாப்பாடு கிடைக்காமல் குளிரிலும் பனியிலும் குடும்பத்தோடு வருந்தும்போது கூடத் தான் மொகலாயர்களுடன் சம்பந்தம் செய்ய

விரும்பவில்லை. அவன் இறக்கும் வரையில் வனத்தில் அப்படியே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்து அனைவராலும் உயர்ந்த புகழை அடைந்தான். அவனைப்போலவே நாமும் வருத்தம் வந்துவிட்டதென்று நம்முடைய உயர்ந்த நிலைமையிலிருந்து மாறக்கூடாது. **இந்துதேச சரித்திரம்.**

நிலையிற் பிரியேல்.

***நிலையில் - (நீ இருக்கின்ற கௌரவமான) நிலையிலிருந்து, பிரியேல் - நீங்காதே.***

69. நெடுங்காலத்துக்கு முன்னர்க் காட்டில் பெரிய யானை ஒன்று தன்னைச்சேர்ந்த யானைக்கூட்டங்களோடு ஒரு ஆழமான மடுவில் இறங்கி விளையாடிக்கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு பெரிய முதலை அதன் காலைப் பிடித்துக்கொண்டு தண்ணீருக்குள் இழுக்கத் தொடங்கிற்று. யானை பலம் உள்ள பெரிய விலங்கான படியினால் அம்முதலையோடு பலநாட்கள் வரையில் சண்டையிட்டுக் கரைக்குவரப் பார்த்தது. ஆனால், அம்முதலை அதற்குக் கொஞ்சமும் இடம் தரவில்லை. அது தண்ணீருக்குள் யானையை அப்படியே இழுத்துக்கொண்டுபோகத் தீர்மானித்தது. பிற்பாடு, அவ்வியானை மிகவும் இளைத்து மகாவிஷ்ணுவைத் துதித்து அவர் உதவியினால் அவ்வாபத்தை நீக்கிக்கொண்டது. அவர் அருள் செய்யாவிட்டால் அஃது இறந்திருப்பது நிச்சயம். ஆதலால், ஆழமான நீரில் இறங்கி அதிகமாக விளையாடக்கூடாது.

**பாகவதம்.**

நீர் விளையாடேல்.

***நீர் - (ஆழமான) நீரில் (இறங்கி), விளையாடேல் - (நீந்தி) விளையாடாதே.***

70. சுக்கிரபகவான் நவக்கிரகங்களில் ஒருவர். அவர் அசுரர்களுக்குக் குரு. எல்லா மந்திரங்களையும் எல்லாச் சாஸ்திரங்களையும் நன்றாகக் கற்றவர். இறந்தவர்களைப் பிழைக்கச் செய்யும் 'மிருத சஞ்சீவி' என்ற மகா மந்திரமும் அவருக்குத் தெரியும். அவர் அதனை யாருக்கும் உபதேசிப்பதில்லை. தம் சிஷ்யர்கள் எத்தனை தடவை சண்டையில் இறந்தாலும் அவர்களை மறுபடியும் பிழைப்பித்து விடுவார். இந்த அற்புத சக்தி தேவகுருவாகிய பிருகஸ்பதிக்குக் கிடையாது. அதனால் தேவர்கள் சுக்கிர பகவானிடத்தில் மாணாக்களுகவிருந்து அவருக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணி, மிருத சஞ்சீவி மகாமந்திரத்தைக் கற்றுக்கொண்டு வரும்படி பிருகஸ்பதியின் புத்திரனை கசன் என்பவனை அனுப்பியிருந்தார்கள். அதனை யறிந்த அசுரர் ஒரு சமயத்தில் சுக்கிரருக்குத் தெரியாமல் கசனைக் கொன்று சாம்பலாக்கிக் கள்ளில் கரைத்து, அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். சுக்கிரர் கள் குடிப்பதில் மிக்க விருப்பமுள்ளவர். அவர் யோசியாமல் அக்கள்ளை ஆசையோடு வாங்கிக் குடித்துவிட்டார். மயக்கம் தெளிந்த பிற்பாடு, அவர் புத்திரி தெய்வயானையினால் உண்மை தெரிந்தது. அப்புறம பலவிதமாக அழுது மிகவும் வருந்தினர். அவர் அடைந்த வருத்தத்தை வாயினாற் சொல்லி முடியாது. அவர் கள் உண்ணுமலிருந்தால் அவ்வித வருத்தத்திற்கு உள்ளாக வேண்டியதில்லையல்லவா ? ஆதலால், நாமும் கள் முதலான அற்ப பானங்களைப் பருகலாகாது. **மகாபாரதம்.**

நுண்மை நுகரேல்.

***நுண்மை* – (மயக்கம் தரும் கள் முதலான) அற்பமான வஸ்துக்களை, *நுகரேல்* - (நீ) அருந்தாதே.**

—○○✿○○—

71. புராணம் சொல்வதில் சமர்த்தரான சூதபுராணிகர் என்பவர் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர். அவர் எல்லாச் சாஸ்திரங்களையும் எல்லாப் புராணங்களையும் நன்றாகக் கற்றுத் தெளிந்திருந்தார். நைமிசம் என்னும் வனத்தில் இருந்த தவத்தில் மிகுந்தவர்களான, சவுனகர் முதலான மகாமுனிவர்கள் அவரிடத்தில் புராணம் கேட்க ஆசைப்பட்டார்கள். அவர் தாழ்ந்த ஜாதியில் பிறந்திருந்தபடியினால் அங்கிருந்த எல்லாமுனிவர்களும் ஒன்று சேர்ந்து பெரிய யாகம் ஒன்று செய்து அதன் முன்னிலையில் அவரை அந்தணர் ஆக்கினார்கள். சூதர் புராணங்களை நன்றாகக் கற்றிராவிட்டால், அந்தணராக முடியாதல்லவா? ஆதலால், நாமும் கஷ்டப்பட்டாவது நன்றாக நூல்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். **மகாபாரதம்.**

நூல் பலகல்.

***நூல்பல—(அறிவை வளர்க்கும்) நூல்கள் பலவற்றையும், கல் — (நீ) கற்றுக்கொள்.***

72. சோழநாட்டில் குண்டையூர்க்கிழார் என்று ஒருவர் இருந்தார். அவர் பயிர்த்தொழில் செய்து அதிகமான நெல்லை உற்பத்திபண்ணி அனைவருக்கும் அன்னம் அளித்துவந்தார். அவர் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் அவரைச் சேர்ந்த திருத்தொண்டர்களுக்கும் தேவையான தானியங்களைத் தருமத்தின் பொருட்டு வருஷந்தோறும் கொடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர் தருமத்தைச் சுந்தரமூர்த்தி நாயனாரும் தாம் செய்த தேவாரத்தில் புகழ்ந்து சொல்லியிருக்கிறார். அவரைப்போல நாமும் நெற்பயிர்செய்து அனைவரையும் உண்பிக்கவேண்டும். **தேவாரம்.**

நெற்பயிர் விளை.

**நெல்பயிர் - நெல்பயிரை, விளை - (நீ) பயிரிடு.**

73. முன்பு திருவாரூரை மநுச்சோழன் என்று ஒரு அரசன் பரிபாலித்துவந்தான். அவனுக்கு வீதி விடங்கன் என்று ஒரு புத்திரன் இருந்தான். அவன் ஒருநாள் இராஜவீதியில் பவனி வருகையில், அவனுடைய தேர்க்காலில் ஒரு பசுவின் கன்று அகப்பட்டு இறந்து போயிற்று. கன்றை இழந்த தாய்ப்பசு அரசன் சபைக்குச் சென்று *ஆராய்ச்சி மணியை அடித்துத் தன் குறையைத் தெரியப்படுத்திற்று. மநுச்சோழன் நன்குக ஆலோசனை செய்து வீதிவிடங்கனை அந்த வீதியில் படுக்கவைத்து அவன் மீது தன் தேரை ஓட்டிக்கொன்று உயர்ந்த நீதியை நிலைநிறுத்தினான். அவனைப்போல அனைவரும் பக்ஷபாத மில்லாமல் நீதி செலுத்தவேண்டும். **பெரியபுராணம்.**

நேர்பட வொழுகு

**நேர்பட - (பக்ஷபாதமில்லாமல்) ஒழுங்காக, ஒழுகு - (நீ) நடந்து கொள்.**

74. முதல் கதையில் தசரத சக்ரவர்த்திக்குக் கைகேயி என்ற ஒரு மனைவி இருந்தாள் என்று படித்திருக்கிறீர்கள். அவள் ஒருசமயம் தன் கணவனிடத்தில் இரண்டு வரங் களைப் பெற்றுக்கொண்டிருந்தாள். நெடுநாள் கழித்துச் சக்ரவர்த்தி தமது மூத்தபுத்திரனை இராமனுக்குப் பட் டாபிஷேகம் செய்ய நிச்சயித்தார். கைகேயி தான் பெற் றிருந்த வரத்தின் வல்லமையினால் இராமனைப் பதி னன்கு வருஷம் காட்டுக்குப் போக்கினாள். அவள் செய்த அக்காரியத்திற்காக அயோத்தியில் இருந்தவர் அனை வரும் அவளை அதிகமாகத் தூஷிக்கத் தொடங்கினார்கள். அவள் வயிற்றில் பிறந்த பரதன் கூடத் தாயின் காரியத்தை

*** நியாயம் வேண்டுகின்றவர் அகாலத்திலும் சென்று தெரிவிப்ப தற்குக் கட்டியிருக்கும் மணி.**

அங்கீகரிக்கவில்லை. அவள் உலகத்தில் இருக்கும் வரையில் அந்த அவமானத்தினால் மிகவும் வருந்திக்கொண் டிருந் தாள். அவளைப்போல நாமும் பிறருக்குத் துன்பம் தரும் படியான காரியங்களைச் செய்யலாகாது. **இராமாயணம்**

நைவினை நணுகேல்.

**நை - (பிறர்) வருந்தக்கூடிய, வினை - (தீய) காரியங்களை, நணு கேல் - (நீ செய்ய) நெருங்காதே.**

---

75. 48-வது கதையைப் படித்துக்கொள்க.

நொய்ய வுரையேல்.

**நொய்ய - (பிறருக்கு வருத்தத்தை உண்டுபண்ணும்படியான) அற்பமான (வார்த்தைகளை,) உரையேல்-(நீ) சொல்லாதே,**

---

76. ஒருசமயத்தில் சர்ப்பங்களுக்குத் தலைவனான ஆதிசேஷனுக்கு வயிற்றில் சூலைநோய் உண்டாயிற்று. அவன் ஆரம்பத்தில் மருந்து முதலியவற்றை உட்கொள் ளாமல் நோயை அலக்ஷ்யம் பண்ணிவந்தான். அந்நோய் நாளடைவில் முற்றி அவனுக்கு அதிகமான வருத்தத்தை உண்டுபண்ணிற்று. நோயைப் பொறுக்கமுடியாமல் அப் புறம் அவன் வைத்தியர்களைத் தேடினான். அகஸ்தியர் முதலான மகாமுனிவர்களும் வந்து அவனுக்கு வைத்தியம் செய்தார்கள். நோய் கொஞ்சமும் குணமாகவில்லை. அவன் புழுப்போலத் துடித்து, அப்படியே நெடுங்காலம் வரையில் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான். பிற்பாடு, திருப்பாற் கடலில் தன்வந்திரி என்ற ஆயுள்வேத பண்டிதர் அவதரித் தார். அவர் அவனுக்குத் தக்க மருந்துகளைச் செய்து கொடுத்து நோயை நீக்கினார். அவனைப்போல நாமும் அஜாக்கிரதையினால் நோய்க்கு இடம்கொடுக்கலாகாது.

நோய்க்கு இடம் கோடேல்.

**நோய்க்கு - நோய்களுக்கு, இடம்கொடேல் - (அபத்தியம் முதலியவைகளைச் செய்து,) (நீ) இடம் கொடுக்காதே.**

77. 23-வது கதையில் 'பாண்டவர் பதின்மூன்று வருஷம் வனத்தில் வாசம்செய்துவந்தால், அவர்கள் பாகத்தைத் துரியோதனன் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்' என்று பெரியவர்கள் தீர்ப்புப் பண்ணினதாகப் படித்திருக்கிறீர்கள். அவர்கள் தங்கள் தவணை வருஷங்களைக் கழித்த பிற்பாடு, துரியோதனனிடத்துக்குக் கிருஷ்ணனை இராஜதூதனாக அனுப்பியிருந்தார்கள். கிருஷ்ணன் அத்தினபுரம் சென்று முதல்நாள் விதுரன் வீட்டில் தங்கி விருந்துண்டு, இரண்டாவதுநாள் இராஜசபைக்குவந்தான். துரியோதனனுக்கு விதுரன் சிறியதந்தை ஆகவேண்டும். அவன் கொஞ்சமும் மரியாதை இல்லாமல், தூதுவந்த கிருஷ்ணனையும், விருந்து செய்த விதுரனையும் இராஜசபையில் பலவாறு தூஷித்துப் பேசினன். வீரர்களிற் சிறந்த விதுரன் அதனால் மிகுந்த கோபம்கொண்டு, தன் உயர்ந்த வில்லைச் சபையில் ஒடித்துப்போட்டுத் "துரியோதனா! இனி நான் உனக்கு ஒருநாளும் உதவி செய்யமாட்டேன்" என்று சொல்லிச் சபதமும் செய்துகொண்டான். அந்தக் காரணத்தினாலேயே அப்புறம் பாண்டவர்களுக்கும் அவனுக்கும் நடந்த பாரத யுத்தத்தில் அவன் விதுரன் உதவியை அடையமுடியவில்லை. அவனைப்போல நாமும் பெரியவர்களுக்குப் பழிப்பை உண்டுபண்ணும்படியான வார்த்தைகளைச் சொல்லலாகாது. *மகா பாரதம்.*

பழிப்பன பகரேல்.

**பழிப்பன - (பெரியவர்களுக்குப்) பழிப்பை உண்டுபண்ணும்படியான (இழிவான) சொற்களை, பகரேல்-(நீ) சொல்லாதே.**

78. 25-வது கதையைப் படித்துக்கொள்க.

பாம்போடு பழகேல்.

**பாம்பொடு - பாம்புகளோடு, பழகேல்-(நீ) சகவாசம் செய்யாதே.**

79. குமாரகுலோத்துங்கன் என்ற சோழராஜன் உறையூர்ப் பட்டணத்தில் அரசுபுரிந்து வந்தான். அவன் ஒட்டக்கூத்தரிடத்தில் கல்விகற்றவன். அரசன் தமக்கு மாணுக்கன் என்ற முறைமையினுல், ஒட்டக்கூத்தர் ஒருவரையும் மதியாமல் கருவங்கொண்டிருந்தார். ஒரு சமயத்தில் அச்சபைக்கு வந்த ஔவையார் அவரைநோக்கி "ஐயா கூத்தரே! நீங்கள் கடைசி யடியில் மூன்று சந்திரன் வரும்படி ஒரு செய்யுள் சொல்லுங்கள்" என்முர். அவர் 'பிள்ளை மதிகண் டெம்பேதை பெரிய மதியும் இழந்தாளே' என்று இரண்டு சந்திரன் வரும்படி பாடினுர். ஔவையார் 'ஒட்டா ஒருமதி கெட்டாய்' என்று சொல்லி அவரை வருக்கும் முன்னிலையில் அவமானப்படுத்தினுர். ஆதலால், நாமும் அவரைப்போலச் சபையில் பிழையுண்டாகச் சொன்னுல், அவமானமடைவோம். **(விநோதரச மஞ்சரி)**

பிழைபடச் சொல்லேல்.

**பிழைபட-(சொல்வதில்) குற்றம் உண்டாகும்படி, சொல்லேல் (நீ ஒன்றையும்) சொல்லாதே.**

80. 13-வது கதையில் திருவள்ளுவர் என்ற தெய்வப் புலவரைப்பற்றிக் கொஞ்சம் படித்திருக்கிறீர்கள். ஆதியில் அவரை மிகவும் தாழ்ந்தவர்களான வள்ளுவர் என்ற ஒரு வகைச் சாதியார் எடுத்து வளர்த்துவந்தார்கள். அவர் தமது நல்லொழுக்கத்தினுலும், உயர்ந்த படிப்பினுலும் உலகத்தில் மிகுந்த பெருமையை அடைந்தார். அவர்

காலத்தில் இருந்த பெரியவர்கள் அவரிடத்தில் வந்து தங்கள் சந்தேகங்களை யெல்லாம் நீக்கிக்கொண்டு போவார்கள். அவர் தமிழ்நாட்டில் புகழையும் பெருமையையும் மிகுதியாகப் பெற்றுத் 'திருக்குறள்' என்னும் ஒரு சிறந்த நூலை இயற்றினார். அவரைப்போல நாமும் நல்லவழியில் பெருமையைச் சம்பாதிக்கவேண்டும். **புலவர் புராணம்.**

பீடுபெற நில்.

*பீடு* - பெருமையை, *பெற* - அடையும்படி, *நில்* – (நீ நல்ல வழியிலே) நில்.

81 முன்னர்ப் பாண்டவர்கள் வனத்தில் வசித்து வந்தபோது கயன் என்ற கந்தருவன் ஒருவன் அர்ச்சுனனிடத்தில் வந்து அவனை அதிகமாகப் புகழ்ந்து தன்னைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டினான். அர்ச்சுனன் "பயப்படாதே; காப்பாற்றுகிறேன்; நான் உனக்கு என்ன செய்யவேண்டும்? விவரமாகச் சொல்" என்று கேட்டான். கந்தருவன் "ஐயா! கிருஷ்ணர் என்னைக் கொல்ல இருக்கிறார்; தாங்கள் அதனைத் தடுத்துக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அர்ச்சுனன், தமையனாகிய 'யுதிஷ்டிரரோடு நெடுநேரம் ஆலோசனை செய்து, 'எப்படியிருந்தாலும், நம்மிடத்தில் அடைக்கலம் புகுந்தவனை நாம் கைவிடலாகாது, என்று தீர்மானித்து, மைத்துனன் என்றும் பாராமல் கிருஷ்ணனோடு யுத்தம் செய்து கந்தருவனைக் காப்பாற்றினான். அவனைப்போல நாமும் நம்மைப் புகழ்ந்து அடுத்தவர்களைக் காப்பாற்ற வேண்டும். **மகாபாரதம்.**

புகழ்ந்தாரைப் போற்றி வாழ்.

**புகழ்ந்தாரை - (உன்னைப்) புகழ்ந்து அடுத்தவர்களை, போற்றி - (கைவிடாமல்) காப்பாற்றி, வாழ் - (நீ) வாழு.**

82. திருவெண்ணெய் நல்லூரில் சடையப்ப முதலியார் என்று ஒரு பெரிய பிரபு இருந்தார். அவர் பயிர்த் தொழிலே யல்லாமல் வேறு ஒரு தொழிலையும் விரும்பிச் செய்ததில்லை. அந்தத் தொழிலிலேயே அவர் அதிக மான செல்வத்தை அடைந்திருந்தார். குமாரகுலோத் துங்கன் முதலான உயர்ந்த அரசர்களும் கவுரவிக்கும்படி யான நிலைமை அவருக்குக் கிடைத்திருந்தது. கவிசக்ர வர்த்தியாகிய கம்பர் அவரைத் தாம்செய்த இராமாயணத் தில் அடிக்கடி புகழ்ந்து பாடியிருக்கிறார். அவ்வளவு மதிப் பும் அவருக்குப் பயிர்த்தொழிலினால் உண்டாயிற்றே யன்றி வேறன்று. அவரைப்போல நாமும் பூமியைத் திருத்திப் பயிர்த்தொழில் செய்து உண்ணவேண்டும்.

**விநோதரச மஞ்சரி.**

## பூமி திருத்தியுண்.

**பூமி - (விளை) நிலத்தை, திருத்தி - (சீர்) திருத்திப் (பயிரிட்டு,) உண் - (நீ அதன் பயனை) உண்ணு.**

83. முன்பு அம்பரீஷன் என்று ஒரு மன்னவன் இருந்தான். அவன் ஒருபெரிய யாகத்தை ஆரம்பித்துச் செய்து வருகையில் இடையில் நேர்ந்த ஒரு குற்றத்தின் பொருட்டு மனிதனைப் பலி கொடுக்கவேண்டிவந்தது. அதற்காக அவ்வரசன் உலகம் முழுவதும் திரிந்து மிகவும் வருந்தி முடிவில் சுனச்சேபன் என்ற ஒரு சிறுவனை அழைத்துக்கொண்டு வந்தான். அச்சிறுவன் தவத்தில் மிகுந்த விசுவாமித்திர முனிவரை நடுவழியில் கண்டு வணங்கி, அவரிடத்தில் தான் பலியாகச் செல்லும் துக்கத் தைச்சொல்லி வருந்தினான். முனிவர் அவன்மேல் இரக் கம்கொண்டு, அவனுக்கு ஒரு மகாமந்திரத்தை உபதேசம்